விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 13 வியாழக்கிழமை (29.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345




# நுகேகொடவில் குண்டு வெடிப்பு



## 18 பேர் பலி; 40 பேர் படுகாயம் ஐந்து பேரின் நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

நுகேகொட சந்தியில் நேற்று மாலை 5.50 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 18 பொதுமக்கள் பலியாகியுள்ளதுடன் 40ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். குண்டுவெடிப்பினையடுத்து நுகேகொட சந்தியிலுள்ள சில கடைகள் தீப்பிடித்து எரிந்ததுடன் மற்றும் பல கடைகள் சேதமடைந்துள்ளன.

இதனைவிட மோட்டார் சைக்கிள் உட்பட வாகனங்கள் சிலவும் எரிந்து நாசமாகியுள்ளன. சம்பவத்தில் காயமடைந்த பொதுமக்கள் களுபோவில மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டுத் தாக்குதலையடுத்து நுகேகொட சந்திப் பகுதியில் பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. போக்குவரத்தும் தடை செய்யப்பட்டது. காயமடைந்தவர்களில் பாடசாலை மாணவர்களும் அடங்குவர். *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## தற்கொலைதாரியான பெண் வவுனியாவைச் சேர்ந்தவர்

### இராணுவம் கூறுகின்றது

(கொழும்பு)

சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதலைமேற்கொண்ட பெண் அடையாளம் காணப்பட்டுள்ளார் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவரது அடையாள அட்டையின்படி அவர் வவுனியா ஆனந்த புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த சரவணன் சுஜாதா (வயது 24) என இராணுவப் பேச்சாளர் கூறினார். (ஏ)

## சமூக சேவைகள் அமைச்சு அலுவலகத்துள் நேற்றுக் காலை தற்கொலைத் தாக்குதல்

### ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு நாரகேன்பிட்டியிலுள்ள சமூக சேவைகள் அமைச்சின் அலுவலகத்தின் உள்ளே நேற்றுக் காலை 8.05 மணியளவில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் படுகாயமடைந்தனர்.

நாரகேன்பிட்டியிலுள்ள அலுவலகத்திற்குள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்ததாகவும் எனினும் அவருக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. பெண் ஒருவர் இத் தாக்குதலை நடத்தினார் என்றும் அப்பகுதியில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஜயந்த விக்கிரமரட்ண தெரிவித்தார்.

இச் சம்பவம் *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கைக்கு ஈரான் ஆயுத உதவி

## தற்கொலைத் தாக்குதலுக்கு

# இலங்கைக்கு ஈரான் ஆயுத உதவி அமெரிக்க அரசு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை ஈரானிடமிருந்து இராணுவத் தளபாடங்கள், ஆயுதங்களை வாங்கினால் அது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபைத் தீர்மானத்திற்கு எதிரானதாக அமையும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஈரான் விஜயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கொழும்பிலுள்ள அமெரிக்க அரசாங்கத்தின் பேச்சாளர் ரெஜிவைற், ஈரான் தொடர்பான அமெரிக்காவின் கொள்கை மிகவும் வெளிப் படையானது. (08 ஆம் பக்கம் பார்க்க)

# தற்கொலைத் தாக்குதலுக்கு ஈ.பி.டி.பி. அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சுக் கட்டடத்திற்குள் நேற்று நடாத்தப்பட்ட தறகொலைத் தாக்குதலை ஈ.பி. டி.பி. கண்டித்துள்ளது. இது தொடர்பாக அவர் கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வரு மாறு,

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சுக் கட்டடத்திற்குள் நேற்றுக் காலை நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்கு தலில் ஒருவர் கொல்லப்பட்டும் இருவர் காய மடைந்தும் உள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

# விமானத் தாக்குதல் குறித்து சபையில் பேச மகிந்த அரசின் அனுமதி பெற வேண்டும்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அரச படைகளின் வான் குண்டுத் தாக்குதல்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரையாற்ற சபா நாயகர் அனுமதியை விட மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் அனுமதிதான் முக்கியம் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடத் தப்பட்ட வான் குண்டுத் தாக்குதல் மற்றும் கிளைமோர்த்தாக்குதல்குறித்து நாடாளுமன் றத்தில் உரையாற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, சபாநாயகரிடம் சிறப்பு அனுமதியை (07 ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிப்பு

(கொழும்பு)

நுகேகொடவில் நேற்று மாலை குண்டு வெடிப்பு இடம்பெற்றதையடுத்து மேல்மாகாண பாடசாலைகள் இன்றும் நாளையும் மூடப்பட் டிருக்கும் என கல்வி அமைச்சு அறிவித்துள் ளது. பாதுகாப்பு காரணங்களுக்காகவே பாட சாலைகள் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

நேற்றைய குண்டுத் தாக்குதலில் பாடசா லை மாணவிகளும் காயமடைந்ததாகக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ச-5)




(C-560)

பெண்களிற்கு எதிரான வன்முறை ஒழிப்பு- 16 நாள் முன்னெடுப்புகள் Nov 25 - Dec 10

பொது வாழ்விலோ அல்லது தனிப்பட்ட வாழ்விலோ பெண்களுக்கு உடல், உள, பாலியல் ரீதியாக தீங்கினை ஏற்படுத்துகின்ற பால்நிலை ரீதியிலான வன்முறையின் எச்செயற்பாடும் அவ்வாறான செயற்பாடுகளின் அச்சுறுத்தல்களும், பலவந்தமும் அல்லது சுதந்திரத்தை தன்னிச்சையாகப் பறித்தலும் பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்.

பால் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம் - 021 222 6922, 021 222 9671


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ்த்தேசியப் போராட்டத்திற்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும்

## சிவாஜிலிங்கம் எம்.பி சபையில் உரை

உண்மையான நண்பன் யார், எதிரி யார் என்பதை அறிந்து தமிழ்த்தேசியப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி சிவாஜிலிங்கம் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமையவுள்ள தமிழீழம், இந்திய பிராந்தியத்திற்கு எதிராக அல்ல. பாதுகாப்பாகவே இருக்கும் என்றும் கூறினார்.

'வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் 6 ஆம் நாள் அமர்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

முற்று முழுதான சிங்கள மயப்படுத்தலை நோக்கியே இந்நாடு சென்று கொண்டிருக்கின்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் எதுவும் தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு கிடைப்பதில்லை. தமிழ் இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

வெளிநாட்டு அமைச்சர் கூறுகிறார்; வெளிநாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை தடைசெய்தோம் என்று. பாகிஸ்தானை போன்று சர்வதேச அரங்கிலிருந்து இலங்கையை வெளியேற்றும் நாள் வெகுவிரைவில் வரும்.

பாகிஸ்தானில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களைவிட மிகமோசமான மீறல்கள் இங்கு இடம்பெறுகின்றன. மிகவிரைவில் இலங்கை அரசாங்கத்திற்கும் தடைவரும்.

சர்வதேச நாடுகள் தடைவிதிக்க வேண்டும். ஐ.நா.அலுவலகத்திலிருந்து யார் வெளியே வந்தாலும் அவர்களை புலி என்று தான் கூறுகின்றனர்.

தமிழர் பகுதிகளில் தினமும் கொலை. எந்தெந்த நாடுகளில் ஆயுதங்களை கொள்வனவு செய்ய முடியுமோ அங்கெல்லாம் நவீன ஆயுத கொள்வனவு செய்வதுதான் அரசின் வேலை. ஜனாதிபதி ஈரானுக்குச் சென்றிருக்கின்றார். அங்கும் ஆயுதங்களை கொள்வனவு செய்வார். ஆனால் ஈரான் மீது அமெரிக்கா படை எடுக்குமானால் இலங்கை அரசாங்கம் மௌனமாகவே இருக்கும்.

அப்போது குறுக்கிட்ட வெளியுறவு அமைச்சர் ரோகித போகொல்லாகம, ஈரானிடமிருந்து அரசாங்கம் ஆயுதங்களை கொள்வனவு செய்யவில்லை என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய சிவாஜிலிங்கம் எம்.பி நல்லதுதான். எவ்வாறாயினும் பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தது போல ஈரானிடமிருந்தும் ஆயுதங்களை கொள்வனவு செய்வீர்கள் என்றார். (ச-5)

# எதிர்வரும் மாதங்களில் பெரும் போர் வெடிக்கும்

## ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் செயலிழந்துபோன போர்நிறுத்த ஒப்பந்தத்தை கைவிட்டு முற்றுமுழுதான யுத்தத்திற்குச் செல்வதாகத் தெரிகின்றது என ஆய்வாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் நாள் கொள்கை விளக்கவுரையில், தென்பகுதி இனவிரோதிகளுடன் பேசியது நேரத்தை வீணடித்த செயல் எனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் 2002ஆம் ஆண்டு போர் நிறுத்திற்கான தனது அர்ப்பணிப்பை கைவிட்டு விடுதலைப்புலிகளின் தலைவரை கொலை செய்து வடக்கை கைப்பற்றப்போவதாக தெரிவித்துள்ளது.

இது மிகுந்த சோர்வை அளிக்கின்றது என்று நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கையுடன் தொடர்புடைய கொழும்பிலுள்ள ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

'தங்கள் போட்டியாளர் சமாதானத்தின் பங்காளர்' என எந்தத்தரப்பும் கருதவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பும் சமாதான செயற்பாடுகள் முடிந்துவிட்டதாகப் பார்க்கின்றனர் இதற்காக ஒவ்வொருவரும் மற்றவர்களையும் சர்வதேச சமூகத்தையும் குறை கூறுகின்றனர்.

எதிர்வரும் மாதங்களில் மிகப்பெரும் போர் நடைபெறும் இதில் அவர்கள் களைப்படைவர். அந்த நேரத்தில் சமாதான முன்னெடுப்பாளர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் உண்டு. இப்பொழுது அதற்கான அறிகுறிகள் இல்லை என அவர் தெரிவித்தார். (அ)

# திறைசேரி செயலாளராக தம்மிக பெரேரா நியமனம்?

(கொழும்பு)

திறைசேரியின் செயலாளராக உள்ள பி.பி.ஜயசுந்தரவை அரசாங்கம் நீக்கவுள்ளது. நாடாளுமன்றில் ஐ.தே.கட்சியின் காமினி ஜயவிக்கிரம பெரேரா இதைத் தெரிவித்தார்.

ஜயசுந்தர நீக்கப்பட்டு முதலீட்டுச் சபையின் தலைவராக தற்போது பதவி வகித்து வரும் தம்மிக பெரேரா நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# அறிவுறுத்தற் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களையும் கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ்ப்பாணம் வலயம் II இற்கு உட்பட கல்விப் பொதுத் தராதரப் (சா/த) பரீட்சை 2007 பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தற் கூட்டம் எதிர்வரும் 01.12.2007 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் தவறாது சமுகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)

# புலிகளின் குரல் மீதான தாக்குதலுக்கு எல்லைகளற்ற ஊடகவியலாளர் கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான புலிகளின் குரல் வானொலி நிலையம் மீதான வான்படையின் தாக்குதலானது ஒரு போர்க்குற்றம் என்று சர்வதேச ஊடகவியலாளர்கள் அமைப்பான எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையின் வடபகுதியில் தமிழ்ப் புலிப் போராளிகளின் வானொலி நிலையமான புலிகளின் குரல் நிலையம் மீது வான்படை நடத்திய தாக்குதலானது ஒரு போர்க்குற்றமாகும். எதுவித எச்சரிக்கையும் விடுக்காமல் வான்படை நடாத்திய தாக்குதலில் மூன்று வானொலி நிலையப் பணியாளர்கள், ஆறு பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் பரப்புரை வானொலியாக புலிகளின் குரல் வானொலி இயங்கிவந்தது. ஆனால் போர் விதிகளோ இராணுவ இலக்குகள் மீது தான் தாக்குதல் நடத்தவேண்டும் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளை கண்டிக்க ஜெனீவா மாநாட்டு விதிகளை பயன்படுத்துகிற அரசாங்கம், அதே ஜெனீவா விதிகளை மறந்துவிட்டு ஜெனீவா மாநாட்டு விதிகளினால் பாதுகாக்கப்படுகின்ற பொதுமக்களின் நிலைகள் மீது தாக்குதல் நடத்துகிறது.

மாவீரர் நாள் நிகழ்வுகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தபோது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமிழ் நெற் இணையத்தளத்தின் தகவலின்படி தாக்குதலின் பின்னரும் மற்றொரு ஒலிபரப்பு சாதனத்தின் ஊடாக வானொலி தொடர்ந்து ஒலிபரப்புக்களை மேற்கொண்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்படுவது என்பது அனைத்துலக விதிகளை பாரதூரமாக மீறுதலாகும்.

பயங்கரவாதிகள் போரிடும் இடங்களில் ஊடகவியலாளர்கள் தங்கள் கடமையைச் செய்ய உரிமை உண்டு என்று ஜெனீவா மாநாட்டின் சரத்துக்களின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்துலக மனிதாபிமான நிலைமைகள் குறித்த உண்மையை அறியும் குழு அறிவித்துள்ளது என எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# சந்திரனில் காட்சியளித்த பகவான் சத்ய சாயி பாபா



ஒவ்வொரு வருடமும் வருகின்ற நவம்பர் மாத 23 ஆம் நாள் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அவதார தினமாகும். அதே போன்று இவ்வருடமும் இம்மாத 23 ஆம் திகதி பகவானுடைய எண்பத்திரண்டாவது ஜனன தினம் உலகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களால் புட்டபர்த்தியிலுள்ள பிரசாந்தி நிலையத்திலும் பிற நாடுகளில் உள்ள சாயி சேவா நிலையங்களிலும் பக்தி பூர்வமாக கொண்டாடப்பட்டது.

அன்றைய இரவுநேர வளர்பிறை சதுர்த்தசி திதியிலும் மறுநாள் பூரணையிலும், பகவான் சந்திரனில் தனது அருட்திருமுகத்தை அடியார்களுக்கு காட்டியருளினார். அவரருகே பகவான் சீரடி பாபாவின் திருவுருவமும் தோன்றி மக்களை மெய்சிலிர்க்க வைத்தது.

இக்காட்சியைப் பார்த்தவர்கள் பகவான் பாபாவின் எண்பத்திரண்டாவது ஜனன நிகழ்வுகளையொட்டி தொலைக்காட்சியில், புட்டபர்த்தியிலிருந்து நேரடி ஒளிபரப்பு செய்யும்போது பகவான் எவ்வடிவத்தில் காட்சியளித்தாரோ அதே திருமுகம் சந்திரனிலும் காட்சியளித்ததாக பேசிக்கொண்டனர்.

கடந்த மாதம் 5 ஆம் திகதி பகவான் திங்கள் ஒளியில் தோன்றுவாரென எதிர்பார்க்கப்பட்டது. இதனை வலம்புரி பத்திரிகையும் சுட்டிக்காட்டியிருந்தது. இருந்தும் பகவானின் அவதார தினத்தன்றே இவ்வருட்காட்சி அருள்பாலிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் பெருந்தொகையான மக்கள் இக்காட்சியை கண்டு பரவசமடைந்ததோடு நில்லாமல் தொலைபேசி மூலமாக மற்றையவர்களுக்கும் அறியச் செய்து இவ்வானந்த காட்சியை காண வைத்தனர்.

"என்னை நோக்கி நீ ஒரு அடி வைத்தால்
நான் உன்னை நோக்கி நூறடி வைப்பேன்." -பாபா-

-ந.யாதவன்-


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை

### முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

### கல்வியாண்டு 2006/2007

**மேற்படி கல்வியாண்டின் முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 05.12.2007 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

**2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 20.01.2008 ஆம் திகதி ஆரம்பமாகும்.**

**சிரேஷ்ட மாணவர்களுக்கான (2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருடம்) மீள் பதிவு பற்றிய மேலதிக விபரங்களை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**பதிவாளர்** (C-564)



## டுபாயில் வெற்றிடங்கள் யூ.ஏ.ஈ.-எம்.பி.எம்.கம்பனி

**(உடனடிப் பயணம்)**

| இல. | தொழில் | சம்பளம் |
|---|---|---|
| 01. | ஆண் சுத்திகரிப்பாளர் | டினார் 600/= |
| 02. | பெண் சுத்திகரிப்பாளர் | டினார் 500/= |

***விதிகளும் நிபந்தனைகளும்***

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, (டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003

துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.** (அ-556)



## டுபாய் ரெலிக்கொம் கேபிள் லைன் உதவியாளர்கள்

**(உடனடிப் பயணம்-ஆண்கள் மட்டும்)**

**சம்பளம் - 800 டினார்**

***விதிகளும் நிபந்தனைகளும்***

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, (டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003

துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.** (அ-556)

# இன்று ஒரு தகவல்

## மரமும் மனிதனும்

ஒரு ராஜா தன் பரிவாரங்களுடன் ஒரு காட்டு வழியாகப் போயக்கொண்டிந்தார். பக்கத்தில் அமைச்சர் அவருடன் போகிறார். அவர்களுக்குப் பின்னால் அரண் மனைச் சேவகர்கள். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு கல் ''விர்'' என்று வந்து ராஜாவின் நெற்றியிலே பட்டது. ராஜா நெற்றியைப் பிடித்தபடி உட்கார்ந்துவிட்டார். பக்கத்தில் இருந்தவர்கள் பதறி விட்டார்கள். ராஜா மீது ஒரு கல் பட்டு விட்டது என்றால் அது சாதாரண விஷயமா? அந்தக் கல் எங்கிருந்து வந்திருக்கும் என்பதை அறிய சேவகர்கள் நாலாபக்கமும் ஓடினார்கள்.

ஒரு பக்கத்தில் ஒரு சின்னப் பையன் நின்று கொண்டிருந்தான். அவன் கையிலே ஒரு கல் இருந்தது. அதைக் கண்ட அமைச்சர் கோபமாக ''இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். பையன் பயந்து விட்டான். மெதுவாக வாயைத்திறந்து மாங்காய் அடித்துக் கொண்டிருக்கிறேன் என்றான். அமைச்சர் பார்த் தார். பக்கத்திலே ஒரு பெரிய மாமரம். மாங்காய்கள் குலை குலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன. கீழே இரண்டு மாங்காய்கள் விழுந்து கிடந்தன. பையன் மாங் காய்க்காக வீசிய கல்தான் ராஜாவின் நெற்றியில் பட்டு விட்டது என்பதை அவர் புரிந்து கொண்டார். இருந்தாலும் அவனைச் சும்மாவிட முடியுமா? பிடித்து இழுத்துக்கொண்டு வந்து ராஜா முன் நிறுத்தினார்.

''அரசே! இவன்தான் கல்வீசியவன். இவனைச் சும்மா விடக்கூடாது. கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும்'' என்றார். ராஜா யோசித்தார். விசாரியாமல் தன்டனை கொடுப்பது பிழை. நாளை காலை விசாரிக்கலாம் என்றார்.

மறுநாள் காலை அரண்மனை விசாரணை மண்டபத்திலே எல்லாரும் கூடினார்கள். சின்னப் பையனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ராஜா விசாரிக்கிறார்... நீ அந்தக் காட்டிலே என்ன செய்து கொண்டிருந்தாய்? ''மாங்காய் அடித்துக்கொண்டிருந்தேன்'' என்கிறான் பையன். ''எத்தனை மாங்காய் கிடைத்தது'' என்றார் ராஜா ''இரண்டு'' என்றான் பையன். ''நீ வீசிய கல் மரத்திலே பட்டால் அதற்கு வலிக்கும் என்று உனக்குத் தெரியுமா?'' என்றார் ராஜா. ''தெரியாது'' என்கிறான் பையன். ராஜா கொஞ்சநேரம் யோசித்தார். அப்புறம் சின் னப்பையனைப் பார்த்துத் தீர்ப்புச் சொல்கிறார். ''உனக்குத் தண்டனை கிடையாது'' உன்னை விடுதலை செய்கிறேன்!... போய்வா... என்றார் ராஜா.

அரண்மனையிலே இருந்த எல்லாருக்கம் ஆச்சரியம்! என்ன, ராஜா தண்டனை கொடுக்காமல் விட்டுவிட்டாரே என்று. ராஜா தீர்ப்புக்கூறிய பின் யாரால் என்ன செய்ய முடியும்? விசாரணைச்சபை கலைந்தது. எல்லாரும் போனபின் அமைச்சர் மாத்திரம் நின்று கொண்டிருந்தார் என்ன அமைச்சரே? என்ன யோசனை? என்று கேட்டார் ராஜா. அமைச்சர் மெதுவாக ஒன்றுமில்லை... இந்தத் தீர்ப்பு என்று இழுத்தார்.

ராஜா சிரித்துக்கொண்டே சொன்னார்... அமைச்சரே மரத்துக்கு அறிவுகுறைவு. மனிதனுக்கு ஆறு அறிவு என்று சொல்கிறார்கள். அறிவு குறைந்த மரம் தன்மீது கல் எறிந்தவனுக்கு இரண்டு மாங்காய்களைப் பரிசாகக் கொடுத்திருக்கிறது. ஆறு அறிவு உள்ள மனிதன் தன்மீது தவறுதலாக கல் எறிந்த பையனுக்கு தண்டனை கொடுக்கலாமா? இதைக் கேட்டதும் அமைச்சர் வெட்கத்தால் தலை குனித்தாராம்.

அறியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கிற மனோபாவம் மனிதனுக்கு வேண்டும் என்பதை வலியுறுத்து கிறது இந்தக் கதை.

''இந்தக் காலத்திலே அப்படிப்பட்ட மனோபாவம் யாருக்குமே இல்லை சார்...'' என்றான் ஒரு சின்னப்பையன் ஏன் அப்படிச் சொல்கிறாய்? என்று கேட்டேன். நான் ஒரு மாமரத்துக்கு கல் எறிந்தேன் அது இரண்டு மாங்காய் கொடுத்தது. அதற்குப் பக்கத்திலே நின்று கொண்டிருந்த மனிதன் மீது கல் படவே இல்லை... இருந்தாலும் அவன் எனக்கு தண்டனை கொடுத்து விட்டான் என்றான். என்ன தண்டனை என்று கேட்டேன். இரண்டு அறை என்றான். ஏன் அப்படி என்றேன். அந்த மரம் அவனுக்கு சொந்தமாம். அது எனக்கு எப்படித்தெரியும் என்றான் அந்தப் பையன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இற்கான போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை-வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 8ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாணத்தில் 55 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் 30 நிலையங்களில் நடைபெறும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலிடப் பட்டுள்ளதாக வும்,

தமக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் தமது பெயர். அடையாள அட்டை இலக்கம் மற்றும் விபரங்களுடன் வடக்கு மாகாண பொது சேவை ஆணைக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வடக்கு- கிழக்கு மாகாண யாழ். பிராந்திய ஆணையாளர் கேட்டுக் கொள்கின்றார். (அ)

## பாராட்டு விழாவும் நிர்வாகிகள் தெரிவும்

கோப்பாய், பரமேஸ்வரி அம்பாள் சேமிப்புக் கழகமும், சமூக அபிவிருத்திக் கழகமும் இணைந்து நடாத்தும் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசனின் பாராட்டுவிழாவும், சமூக அபிவிருத்திக் கழகத்தின் புதிய வருட நிர்வாகிகள் தெரிவும், நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சூரியோதய நிலைய மண்ட பத்தில் திருமதி அ.பேனாட் மகேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பரமேஸ்வரி அம்பாள் ஆலய பிரதமகுரு, புனித மரியாள் ஆலய துணைப் பங்குத் தந்தை அருட்திரு பி.பெனிக்னஸ், கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் எஸ்.தயாபரன், கோப்பாய் சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்.சிவகுமார், யாழ். க.அ.மன்ற வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி எஸ்.கவிதா, கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை அதிபர் எஸ்.லதீ சன், கழகப் போசகர் திருமதி சி.சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள். கழக மட்டப் போட்டி நிகழ்வுகளுக்கான பரிசில் வழங்கலும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும். (அ)

## பரிசளிப்பு விழா

யா/கல்வியங்காடு இந்து தமிழ் கல வன் பாடசாலையின் பரிசளிப்பு விழா டிசம்பர் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி த.கமல ராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நல்லூர் கல்விக் கோட்ட அதிகாரி கே.வி.குணசேகரம் முதன்மை விருந்தினராகவும் யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாஸன், ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் கா.தவராசா, ஆ.கனகசபை ஆகியோரும் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற் புரையை ஆசிரியர் திருமதி ஜெ.செந்தில் குமரனும் நன்றியுரையை ஆசிரியர் து.ரகுமாரும் நிகழ்த்துவார்கள். பரிசு வழங்கலை அடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (கு)

## தமிழ்த்தினப் போட்டிகள்

வடமராட்சி வலய மட்ட தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 2, 6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வுகளாவன, இசைக் குழு -2, நடன குழு-2, வில்லுப் பாட்டு, தமிழறிவு வினா விடைப் போட்டி ஆகியனவாகும். (அ-19)

## விண்ணப்பம் கோரல்

நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவில் வகுப்பு II இல் உள்ள நிறுவன அபிவி ருத்தி உத்தியோகத்தர்களுக்கான 1ஆம் மற்றும் 2ஆம் வினைத்திறன் தடை காண் பரீட்சை, 2008 மார்ச் மாதம் கொழும்பில் நடாத்தப் படவுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் 27.12.2007 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும் வகையில் ''பரீட்சை ஆணையாளர் நாயகம்'' இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை, எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 30.11.207 ஆம் திகதி வர்த்தமானப்பத்திரிகையிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ)

## க.பொ.த.(சா/த) பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.9 மணிக்கு யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும்.

கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி வலயங்களுக்கு பரீட்சைப் பணிக்காக நியமனம் பெற்ற பரீட்சை இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவி பரீட்சை மேற்பார்வையாளர்கள் தவறாது சமூகம் தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (அ)

## இராசிபலன்

29.11.2007
(கார்த்திகை 13. வியாழக்கிழமை)
பஞ்சமி பிற்பகல் 12.12 மணிவரை
பூசம் முன்னிரவு 07.46 மணிவரை
இராகுகாலம் 01.43-03.13 மணிவரை
சுபநேரம் 07.43-09.13 மணிவரை
அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், ரோகநிலை. |
| இடபம் | மாதர்நட்பு, நற்கீர்த்தி, மனோதைரியம், முயற்சி கைகூடும். |
| மிதுனம் | போசனசுகக்குறைவு, அதிகசெலவு, திடீர்நன்மை, கடின வார்த்தை. |
| கடகம் | வெகுமானம், சயனசுகம், ஆழ்ந்த சிந்தை, தொழில் முயற்சி. |
| சிங்கம் | பிதாசிந்தை, காரிய அலைச்சல், பிறருக்கு உதவுதல், பணவிரயம். |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, தொழில் வருமானம், முயற்சி கைகூடும், பெருமையடைதல். |
| துலாம் | அதிக பிரயாசை, உறவினர் வருகை, பிரபுத்தனம், போசனசுகம். |
| விருச்சிகம் | சரீரப்பிரயாசை, பிரயாணம், வீண் பயம், காரியதாமதம். |
| தனுசு | வீண்பகை, முயற்சி தடங்கல், பொருள் விரயம், முழங்கால்வலி. |
| மகரம் | திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், சுபசெய்தி, போசனசுகம். |
| மீனம் | புத்திரரால் கவலை, காரிய இடையூறு, பித்தரோகம், பூர்வபுண்ணிய கருமம், |

வளவன்

## அமரர் டாக்டர் திருமதி குகதாசனுக்கு மருத்துவ பீடம் அஞ்சலி

கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றன்று கொழும்பில் இறைபாதம் அடைந்த யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் தோல் சிகிச்சை வைத்தியரும், மருத்துவபீடத்தின் முன்னை நாள் வருகை தரு விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி திருமதி குண ரஞ்சிதம் குகதாஸ் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்றை இன்று வியாழக் கிழமை காலை 11 மணி முதல் பகல் 12 மணிவரை யாழ்.மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடாத்துவதற்கு மருத்துவ மாணவர் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்வில் மருத்துவ பீட ஆசிரியர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான முன்னோடி கல்விக் கருத்தரங்கு

பருத்தித்துறை பிரதேசத்தில் க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு தங்கள் மத்தியில் வாழ்கின்ற புலமை வாதிகளினால் கல்விக் கருத்தரங்கொன்றினை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளதாகவும் அப்பகுதியில் உள்ள பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல மாணவர்களும் கலந்து பயனடையச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு சகல பாடசாலை அதிபர்களையும் வேண்டிக்கொள்வதாகவும் பருத்தித்துறை சாயி மந்திர் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

கருத்தரங்கிற்கான நேர அட்டவணை முதலாம் திகதி சனி காலை 8 -11 மணிவரை கணிதம், மாலை 12 மணிமுதல் 2 மணி வரை சமூகக்கல்வி, 2ஆம் திகதி ஞாயிறு காலை 8.30 முதல் 12 மணி வரை ஆங்கிலம், மாலை 12.30 முதல் 4 மணிவரை விஞ்ஞானம். (அ)

## விடுதலைப்புலிகள் தமது நடமாட்டத்தை கேரளாவுக்கு மாற்றிக் கொண்டுள்ளனர்

### இந்திய தென் பிராந்திய கடற்படை துணைத் தளபதி தெரிவிப்பு

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டதையடுத்து விடுதலைப்புலிகள் தமது நடமாட்டத்தை கேரளப் பகுதிக்கு மாற்றிக்கொண்டுள்ளதாக தென் பிராந்திய கடற்படை துணைத் தளபதி சுனில் தாம்லே தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளின் நடமாட்டம் கேரளப் பகுதியில் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் கொச்சிக்கும் திருவனந்தபுரத்திற்குமிடையே கடலில் இருந்த மீன் பிடி படக்கு ஒன்றை விடுதலைப் புலிகள் திருடிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து தமிழக கடற் பகுதிகளில் கண்காணிப்புப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. இதனால் கேரளாவில் மலபார் கடற் பகுதியிலிருந்து செயற்பட விடுதலைப் புலிகள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த வழியாக ஆயுதங்கள் மற்றும் முக்கிய பொருட்களையும் இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-5)

## உணவுப் பொருட்கள் உற்பத்தியை ஊக்குவிக்க வீட்டுத் தோட்டப் போட்டிக்கு விண்ணப்பம்கோரல்

தேசிய வேலைத்திட்டம் 2007-2010 இன் கீழ் உள்ளூர் உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுடன் போசணை மட்டத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய மட்டத்தில் சிறந்த வீட்டுத் தோட்டத்தை தெரிவு செய்வதற்கான போட்டியை நடாத்த விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு முன்வந்துள் ளது.

போட்டிகள் தனியார் வீட்டுத் தோட்டம், மாதிரி அலுவலக வளாக வீட்டுத்தோட்டம்,மாதிரி பாடசாலை வீட்டுத்தோட்டம், உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட ரீதியான வீட்டுத் தோட்டம் மக்கள் பிரதிநிதிகள் வீட்டுத் தோட்டம் என ஆறு தலைப்புக்களைக் கொண்டதாக அமையும்.

மேற்குறித்த தலைப்புகளில் ஏதாவதொன்றை மட்டும் ஒருபோட்டியாளர் தெரிவு செய்வதுடன் தலைப்புக்களுக்கமைவாக நீண்டகால நோக்குடன் தோட்டத்தை ஸ்தாபித்து பராமரிக்க வேண்டும். மேற்படி ஆறு தலைப்புக்களிலும் நகரமட்டம், கிராம மட்டம் ஆகிய இரு பிரதேசங்களிற்கும் வெவ்வேறாக போட்டிகள் நடாத்தப்படும்.

போட்டியாளர் தோட்டத்தை அமைக்கும்போது, நீண்டகாலத் திட்டத்தில் ஸ்தாபித்து இயற்கைப் பசளையைப் பாவிப்பதுடன், கிருமிநாசினியை குறைவாகவோ அல்லது முற்றாகவோ பாவிக்காமல் இருக்கவேண்டும். நகர்ப்புறப் போட்டியாளர் மாநகர சபை, நகரசபை எல்லைக்குள் குறைந்தது 3/4 பரப்பிலும் கிராமப்புறப் போட்டியாளர் குறைந்தது 2 1/2 பரப்பிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவேண்டும். போட்டிகள், பிரதேச செயலாளர், மாவட்டம், மாகாணம், தேசிய ஆகிய மட்டங்களில் நடைபெறும். இப்போட்டிகள் யாவும் ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்படும்.

போட்டி பற்றிய நிபந்தனைகள், பரிசில் விபரங்கள் மற்றும் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை, கமநல சேவைகளற் நிலையம், பிரதேச செயலகங்கள்,வலயக்கல்வி அலுவலகங்கள்,யாழ்.மாநகர சபை ( சாவகச்சேரி,பருத்தித்துறை, வல்வெட்டித்துறை) நகர சபைகள் ஆகிய இடங்களில் பார்வையிடலாம்.

விண்ணப்பங்கள் யாவும் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அன்றி நேரடியாகவோ அவ்வப் பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன்,பாடசாலைத் தோட்டப் போட்டிகள் யாவும் அவ்வவ் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். (அ)

## வலி. தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ள 98 வேலைத்திட்டங்கள்

வலி.தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் பின்தங்கிய 11 கிராமங்களில் 'கமநெகும' திட்டத்தின் கீழ்98 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

மலசலகூடங்கள் புனரமைப்பு, விவசாயிகளுக்கு உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல், விவசாயிகளுக்கு நல்லின விதை தானியங்கள் பெற்றுக்கொடுத்தல், மின்சார விநியோகம் செய்தல், முன்பள்ளிகள் புனரமைப்பு, முன்பள்ளிகளுக்கான தளபாட விநியோகம், கிராமிய மட்ட தொழிற் பயிற்சி வழங்கல், மரம் நடுகை உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் 11 கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்படி வேலைத் திட்டங்களை 'கமநெகும' திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு 13 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

மேற்படி திட்டங்களை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள் ளார்.(அ-5)

## இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளையை உரிய இடத்தில் இயக்கக் கோரிக்கை

வேலணையில் செயற்பட்டு வரும் ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையை மீண்டும் ஊர்காவற்றுறைக்கு இடமாற்றம் செய்யுமாறு ஊர்காவற்றுறை பகுதி பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஊர்காவற்றுறையில் செயற்பட்டு வந்த இலங்கை வங்கி 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வுடன் இடம்பெயர்ந்து பல இடங்களில் செயற்பட்டு, தற்பொழுது வேலணையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதே நேரம் வேலணையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வங்கியின் நீடித்த கருமபீடம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் அலுவலகத்தில் வாரத்தில் ஐந்து நாட்கள் சேவையாக செயற்பட்டுக் கொண்டி ருக்கின்றது.




வேலணைக்குச் சென்று வங்கிக் கருமங்களை ஆற்றுவதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டும் ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக கிளையை. ஊர்காவற்றுறையில் நிரந்தரமாக செயற்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளனர். (அ-5)

## திருத்தப்படாத வீதிகள் மக்கள் விசனம்

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பல வீதிகள் திருத்தப்படா நிலையில் இருப்பதாகவும் அண்மையில் பெய்த மழை காரணமாக போக்குவரத்துச் செய்ய முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பண்டத்தரிப்பு, புனித பற்றிமா அன்னை திருத்தலத்தை சூழவுள்ள வீதிகள் மிக மோசமாகவுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (அ)

## சுன்னாகம் லயன்ஸ்கழகம் பாராட்டும் வைபவம்

சுன்னாகம் லயன்ஸ் கழகம் நடாத்தும் 2007-5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 100 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற உடுவில் கல்விக்கோட்ட மாணவர்களை பாராட்டும் வைபவம் டிசம்பர் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் லயன்ஸ்கழகத் தலைவர் லயன் செ. மகாதேவா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக லயன் பொ.கமலநாதனும், லயன் கே.எம்.பத்மநாதன், MJF உம், லயன் கே.கங்கை வேணியனும்,கௌரவ விருந்தினர்களாக தினக்குரல் - நிர்வாகப் பணிப்பாளர் ஆ.சி.நடராசாவும்,உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பூப்பந்தாட்டப் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற்ற உடுவில் மான்ஸ் கல்லூரி மாணவர்களையும், ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (அ)

## சிறந்த விவசாயிகள், அமைப்புகள் கௌரவிக்கும் வைபவம்

யாழ்.மாவட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த விவசாயிகளையும், விவசாய அபிவிருத்தியில் ஈடுபடும் அமைப்புகளையும், கௌரவிக்கும் வைபவம் எதிர்வரும் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலிமாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஷ் கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. வ. அமிர்தலிங்கமும், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம். பற்றிக்டிறஞ்சனும் கலந்து கொள்கின்றனர். யாழ்.மாவட்ட விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியில் தெரிவு செய்யப்பட்ட நிகழ்வில் சிறந்த விவசாயிகள் மற்றும் விவசாய அபிவிருத்தி அமைப் புகளுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளது. (5)

## பிரதேச செயலக பிரிவுவாரியாக கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்தில் கடமை புரியும் கிராமசேவையாளர்கள் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கு பிரதேச செயலர் பிரிவு வாரியாக அனர்த்த முகாமைத்துவ கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

சமகால சூழ்நிலையில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கும் அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்த்தல் அத்தகைய சந்தர்ப்பங்களில் பொருத்தமான முறையில் மேற்கொள்ள வேண்டிய உதவிகள் என்பன தொடர்பாக பயிற்சிகள் கருத்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அனர்த்த முகாமைத்துவ கருத்தரங்குகள் ஐ.ஓ.எம். அனுசரணையுடன் பிரதேச செயலர் பிரிவு வாரியாக இரண்டு தினங்களைக் கொண்டதாக நடைபெற்று வருகின்றது. (அ-5)

## எயிட்ஸ் தின நிகழ்வுகள்

யாழ்.மாவட்ட எச்.ஐ.வி. எயிட்ஸ் இணைப்புக் குழுவினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 1ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு எயிட்ஸ் தின நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்விற்குபிரதமவிருந்தினராக யாழ். அரசஅதிபர் க.கணேஷ் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை பீடாதிபதி வைத்திய கலாநிதி கே.சிவபாலன் கலந்துகொள்கின்றார்.

கௌரவ விருந்தினர்களாக ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன யாழ்.இணைப்பதிகாரி செல்வி விற்றோறணி மற்றும் யுனிசெவ் யாழ்.வலய சுகாதார மற்றும் போஷாக்கு நிபுணர் செல்வி டயானி அராக்கி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் எச்.ஐ.வி. எயிட்ஸின் நிலை பற்றி வைத் திய கலாநிதி சி.கணேசலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளார். தொடர்ந்து யாழ்.மாவட்ட மட்டத் தில் நடாத்துப் பட்ட எச்.ஐ.வி. எயிட்ஸ் பற்றிய சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் காலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (5,6)

## செங்கை ஆழியான் நாவல்கள் ஒரு திறனாய்வு நோக்கு

யாழ். இலக்கிய வட்டம் வெளியிடும் கந்தையா முருகதாசனின் ஆய்வு நூல் 'செங்கை ஆழியான் நாவல் கள் ஒரு திறனாய்வு நோக்கு' வெளியீட்டு விழா எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வாழ்த்துரையையும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.இரகுநாதன் வெளியீட்டுரையையும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆய்வுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

முதற்பிரதியை ஹரிகணன் பிறிண்டேர்ஸ் உரிமையாளர் சி.ராஜ்குமார் பெறவுள்ளார். இலக்கிய வட்டச் செயலாளர் நயினை கி.கிருபாணந்தா நன்றியுரை நிகழ்த்துவார். (அ)

## ஆண்டிகேணி ஐயனார் புராணம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் ஆண்டிகேணி ஐயனார் புராணம் வட்டுக்கோட்டை பண்டிதர் க.மயில்வாகனம் அவர்களால் பாடப்பட்டுள்ளது.

சிவத்திரு க.வைத்தீஸ்வரக் குருக்களின் வேண்டுகோளுக்கு அமைய பாடப்பட்ட இப்புராணம் இளவாலை சைவப் புலவர் சு.செல்லத்துரையின் உரையுடன் காரைநகர் மணிவாசக சபையினரால் விரைவில்வெளியிடப்படவுள்ளது.(அ)

## சர்வதேச மனித உரிமைகள் தின இறுதிக் கட்டுரைப் போட்டிகள் சனிக்கிழமை

இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் வலயங்கள் தோறும் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 1ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் இல. 01, 03ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக இணைப்பதிகாரி எஸ். சிவராஜசிங்கம் அறிவிக்கின்றார்.

இதன்படி மத்திய பிரிவுக்கும், கீழ்ப் பிரிவுக்கும், காலை 10 மணி தொடக்கம் 11 மணிவரை கட்டுரைப் போட்டியும் காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை மேற்பிரி வினருக்கான கட்டுரைப் போட்டியும் நடைபெறவுள்ளது.

மேற்பிரிவினருக்கும் மத்திய பிரிவினருக்குமான போட்டித் தலைப்பு மண்டபத்தில் அறிவிக்கப்படும் எனவும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களும், நடைமுறை பிரச்சினைகளை உள்ளடக்கியதாகவும் இத்தலைப்புகள் அமையும் என்பதனையும் பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப் பதிகாரி தெரிவித்துள்ளார்.

கீழ்ப்பிரிவினர் ஏற்கனவே வழங்கப்பட்ட 'சிறுவர் உரிமைகளும் கடமைகளும்' எனும் தலைப்பிலேயே தமது கட்டுரையை எழுதப் பணிக்கப்படவுள்ளனர்.கீழ்ப்பிரிவினர் 150 சொற்கள், மத்திய பிரிவினர் 200 சொற்கள்,மேற்பிரிவினர் 250 சொற்களில் தமது ஆக்கங்களை படைக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை கீழ்வரும் பெயர் விபரங்கள் வலயக் கல்விப் பணிப் பாளர்களால் தமக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் யாழ்ப்பாண வலயத்தில் குறிப்பிட்ட பிரிவுகளில் தங்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படாத ஆனால் முதல் மூன்று இடங்களுக்குள் இடம்பிடித்தவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் அத்தாட்சியுடன் போட்டியில் பங்குபற்றலாமென மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.இணைப்பதிகாரி எஸ்.சிவராஜசிங்கம் கேட்டுள்ளார்.

வலய மட்டங்களில் முதல் மூன்று இடங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் வருமாறு,

**வடமராட்சி வலயம்**

(பிரிவு I ) க.செந்துஜா-வட இந்து மகளிர் கல்லூரி,வி.லாவண்யா- விக்னேஸ்வராக் கல்லூரி, ஸ்ரீ.கேதிகா-தும்பளை சிவப்பிரகாச வித்தி.

(பிரிவு II ) ச.தீபிகா - புற்றளை மகா வித்தியால யம், பு.ராஜாராம்- ஹாட்லிக் கல்லூரி, ஆ.நிதர்ஷன் - விக்னேஸ்வராக் கல்லூரி.

(பிரிவு III ) சி.நிரோசன்-ஹாட்லிக் கல்லூரி, த.நிருபன் - விக்னேஸ்வராக் கல்லூரி, த.திவாகர் - சிதம்பராக் கல்லூரி.

**தீவக வலயம்**

(பிரிவு I ) நி.தவறஞ்சன் - கலாநிதி ஆ .தியாகராஜா ம.ம.வி.,செ. அருள்ராஜ் -புனிதஅந்தோனியார்கல்லூரி, ரகௌசிகா -நயினாதீவு மகா வித்தியாலயம்.

(பிரிவு II ) றோ.கிரிசாந்தி -புனித மரியாள் றோ.க.பெ.ம.வி.,செ.சஜீவன் -நெடுந் தீவு மகா வித்தியாலயம், வி.மேகலா -கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வி.

(பிரிவுIII) க.கோகிலவாணி -கலாநிதி ஆ.தியா கராஜா ம.வி.,பு.சிந்துஜா -கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வி., ஜே. றெஜிந்தன் - புனித அந்தோனியார் கல்லூரி.

**தென்மராட்சி வலயம்**

(பிரிவு I ) கமலேஸ்வரன் சோபிகா -வரணி மகா வித்தியாலயம், இராசேஸ்வரசர் மா நிதிஸ்ராம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உதயகுமார் குணசுகி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.,

(பிரிவு II ) அம்பிகாநிதி கோகுலன் -வரணி மகா வித்தியாலயம், அன்னலிங்கம் தர்மாகினி -சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ஸ்ரீநாதக் குருக்கள் அகிலாண்டேஸ்வரி- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

(பிரிவு III ) இலட்சுமணன் யசோதா-வரணி மகா வித்தியாலயம், சிவகுருகஸ் தூரி- மீசாலை வீரசிங்கம் ம.வி., விஜயகுமார் விஜயா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**வலிகாம வலயம்**

(பிரிவு I ) க.சிதம்பரபாலனி-தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தி., த.தர்சிகா- மகாஜனாக் கல்லூரி, நீ.சயந்தன்- சில்லாலை றோ.க.பாடசாலை.

(பிரிவு II ) க.கோகுலன்-மகாஜனாக் கல்லூரி, நா.மேரிநிலா உஷா- இளவாலை கன்னியர் மடம் ம.வித்தி, ஜெ.பாரதி -மயிலணி சைவ வித்தியாலயம்.

(பிரிவு III ) த.சகுந்தலா- பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, மு.வினோத் -மானிப்பாய் இந்துக் கல்லூரி, தி.டிலக்சனா-இளவாலை மெய்கண்டான் ம.வித்தி.

**யாழ்ப்பாண வலயம்**

(பிரிவு I )எம்.தருசிகன்- சென்ஜோன்ஜ் கல்லூரி,ம.வித்தாரகன் -சென்ஜோன்ஸ் கல்லூரி., ஆர்.டீன்-சென்ஜோன்ஸ் கல்லூரி.

(பிரிவு II ) எல்.தர்சன்-சென்ஜோன்ஸ் கல்லூரி, பேர்டினன் ஸ்கைலோ-சென்ஜோன்ஸ் கல்லூரி.

(பிரிவு III ) வீ.கௌதமன் -சென்ஜோன்ஸ் கல்லூரி. (5)

## தீவக மக்களுக்கான பல்துறைசார் இலவச மருத்துவ முகாம்

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ். போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை மற்றும் வேலணை கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து நடாத்தும் பல்துறை சார் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரை வேலணை கிராமிய வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இம் மருத்துவமுகாமில் சத்திர சிகிச்சை மருத்துவம்,பெண் நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், சலரோகம் மற்றும் சரும நோயியல் சார் மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கவுள்ளனர். அத்துடன் ஆய்வுகூட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் தீவக மக்கள் கலந்து வைத்தியசேவையைப் பெற்றுக்கொள்ளலாமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (5)

# விளையாட்டு விளையாட்டாக...

உலக நாடுகளில் மட்டுமல்ல எமது தேசத்திலும் விளையாட்டின் பெருமை உணர்த்தப்பட்டு வருகிறது. ஆனால் அதன் சிறப்பையும் பிள்ளைகளின் உடல் வளர்ச்சியையும் உணர்ந்துகொள்ளாத பெற்றார் பிள்ளைகளை புத்தகப் பூச்சிகளாக மட்டும் வளர்த்தெடுப்பதில் தான் அதிக நாட்டம் கொள்கிறார்கள். இதனால் அவர்களின் முழு ஆளுமை, அவர்களின் திறமை, கூட்டுவாழ்வு, வெற்றி தோல்வியை ஏற்கும் மனநிலை, பிரச்சினைக்கு முகம்கொடுத்து தம்மைத் தாமே வழிப்படுத்தி சிந்தனைகளை வளர்த்தெடுத்தல் போன்ற பண்புகளை விளையாட்டுப் போட்டிகளின் மூலம் கற்றுக்கொள்ள முடியும் என்பதனை உணரத் தவறி விடுகின்றார்கள்.

விளையாட்டுத்தானே என விளையாட்டாக நினைத்து விடுகிறார்கள். ஆனால் இதில் பல விடயங்கள் கற்பிக்கப்படுவதுடன் உளத்தை சமநிலைப் படுத்தவும், சிந்தனைத் திறன் வளரவும், புரிந்துணர்வும், தன்னம்பிக்கையும், தன் திறமைகளை தானே உணர்ந்துகொள்ளவும், தன் கவலைகளை குறைத்து ,கூட்டு வாழ்க்கை பகிர்ந்து வாழ்தல்,வெற்றிதோல்வியை ஏற்று வாழ்தல் போன்ற வற்றையும் விளையாட்டு விளையாட்டாக விளையாடும் போதே கற்றுக் கொள்ளும் நிலை உருவாகி வளருகிறது.

பல நாடுகள், பல கிராமங்கள், அவ்வூர் பாடசாலைகள், கழகங்கள், குழுக்களினால் விளையாட்டில் ஏற்படுத்தும் சாதனைகளால் புகழ்பெற்று வளரவும், அந்த விளையாட்டு வீரர்களின் திறமைகள்தான் காரணமாகின்றன. முழு ஆளுமை உள்ளவனாக வளர விளையாட்டு பெரிதும் உதவுகிறது. சிறந்த நிர்வாகியாக

**உளவியல்**

உயரவும் விளையாட்டு அனுபவங்கள் பக்கத்துணைபுரிகிறது.

ஏட்டுக்கல்வி மட்டும் ஒருவனை முழு மனிதனாக ஆக்கி விடுவதில்லை. விளையாட்டுக்கள் எவனையும் வாழ்க்கையிற் கெடுத்துவிடுவதில்லை. இதற்கு ஒரு உதாரணம்:

நிர்வாக அதிகாரி ஒருவர் தனது நிர்வாகத்தை நடாத்துவதில் பெரும் சிரமப்பட்டு வந்தார். சக ஊழியர்களுக்கும் அந்த அதிகாரிக்கு மிடையில் புரிந்துணர்வு இல்லாத நிலையில் நிர்வாகம் நடத்துவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டு வந்தது.

அந்த நிர்வாகியோ இன்றைய சர்வதேச கிரிக்கெற் போட்டிகளை அறிவதில் ஆர்வம் கொண்டவர். வானொலியிலும்,நேரிலும் பார்த்து, ரசித்து வந்தபோதும் விளையாட்டுக்களில் ஈடுபடுவது அரிதாகவே இருந்தது. வேறு ஓர் நிறுவனத்தினர் அவரது நிர்வாகத்தில் உள்ளவர்ளுடன் சினேகபூர்வ விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு செய்தனர்.

அதிலும் அவர் தன் அதிகாரத் தன்மையையே பெரிதுபடுத்தித் தானே அக் குழுவிற்கு தலைமை வகித்து தன் குழுவைத் துடுப்பாட்ட விளையாட்டிற்கு கூட்டிச் சென்றார். விளையாட்டு ஆரம்பமானது, தலைவர் துடுப்பெடுத்து ஆடினார். சிற்றூழியரின் பந்துக்கு அவரது துடுப்பு தடுக்கத் தவறியதால் ஆட்டமிழந்தார். அவரது மனம் வேதனையில் வாடியது. விளையாட்டிலும் தான் தான் பெரியவர் என்ற மனநிலை அவரிடம் தோல்வியை ஏற்க மறுத்தது.

விளையாட்டுப் போட்டியில் அந்த அதிகாரியின் சக ஊழியர்களின் திறமையான ஆட்டம் வெற்றியைத் தேடிக்கொடுத்தது.எல்லோரும் அவ் விளையாட்டு வீரர்களை குறிப்பாக அதில் விளையாடிய சிற்றூழியர்களின் திறமைகளைப் பாராட்டினார்கள். இதன் முடிவில் தன் நிலையை உணர்ந்து கொண்ட அவ் அதிகாரி தனது குழுவின் வெற்றியால் தான் பெருமை அடைந்ததையிட்டு அவர் நன்றி கூறுகையில்,

"ஒருவர் எல்லாவற்றிலும் திறமையாக இருப்பார் என்ற தப்பெண்ணத்தை இவ் விளையாட்டின் முடிவுகள் கற்றுக்கொள்ள வைத்தன. ஒவ்வொருவருக்கும் ஏதோ வகையில் ஏதோதிறமைகள் இருக்கத்தான் செய்கிறது. அவர்களின் திறமைகளை அவர்கள் தேடி அறிந்து கொள்வதிலே தான் அவர்கள் வெற்றியே தங்கியுள்ளது.

அதேபோல் விளையாட்டின் மூலம் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம் என்பதை எனக்கு அனுபவத்தில் உணரவைத்தது.

வெற்றி தோல்விகளை தாங்கும் மனநிலை இருந்தால் எந்த பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கலாம் என்பதனையும் முயற்சியும் முன்னேற்றமும் தன் திறமைகளை பயன்படுத்துவதில்தான் தங்கியுள்ளது என்ற படிப்பினையையும் தந்துள்ளது" என்பதனை அவர் கூறும் போது அவரது அறியாமை இருள் அகன்று ஒளிபெற்று புன்முறுவல் பூத்தவண்ணம் அவ்வீரருக்கு வாழ்த் துக் கூறினார்.

உணரவோ உணர்த்தவோ முடியாத பல விடயங்களை நடை முறையில்உணரவைக்க இவ்விளையாட்டுகள் பெரிதும் உதவுகின்றன. அன்று முதல்,நிர்வாக அதிகாரி – ஊழியர் உறவு வலுவடைந்து புரிந்துணர்வு மலரத் தொடங்கியது. நிர்வாகம் சிறப்பாக இயங்கவும் வழி பிறந்தது.

இன்று மேற்கத்திய நாடுகளிலும் பல விளையாட்டுக்களை அறிமுகப் படுத்தியே சிறுவர்களின் ஆரம்பக் கல்வியினையும், முதியோர் கல்வியினையும், சுலபமாக கற்பிக்க முடியும் என்பதனை அறிந்து செயற்படுகின்றனர்.

அதன் மூலம் அவர்களின் உடல் உள திறமைகளைக் கண்டறிந்து வளர்த்தெடுக்கும் வழிகளை, கற்பித்தலிலும் கையாளுகின்றனர். விளக்கவுரைகளைக் கூட குறைத்து விளையாட்டு முறையில் கற்பித்து விளக்க முடியும் என்பதனை நடைமுறைப் படுத்தியுள்ளனர்.

முன்னையோர் சொன்ன பழமொழிகளும் இதன் அடிப்படையிலே தான் அமைகிறது. "வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்பதற்கு அமைய விளையாட்டு விளையாட்டாக விளையாட்டின் அர்த்தங்களை உணர்த்துவதால் உள வளர்ச்சியும்,உடல் வளர்ச்சியும்கொண்டதாகபலமான ஆளுமை கொண்ட சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**செ.யோசப்பாலா**

விளையாட்டின் மூலம் மகிழ்ச்சியுடன் புதிய சிந்தனைகளை வளர்த்தெடுக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்து கொள்ளல் மிகவும் அவசியம் ஆகும்.

# தமிழ் சிங்கள மொழிகளில் லங்கா புவத்தின் செய்திச் சேவை

இலங்கை அரசின் முன்னணி செய்தி நிறுவனமான 'லங்கா புவத்' நியூஸ் அலேர்ட் எஸ்.எம்.எஸ்.சேவையொன்றினை நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தது.

மொபிடெல் நிறுவனமும், ல்ங்கா புவத் நிறுவனமும் இணைந்து முதன் முறையாக தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இந்த எஸ்.எம்.எஸ்.நியுஸ் அலேர்ட் சேவையை ஆரம்பித்து வைத்தன.

புதிய செய்திச் சேவை தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் அசோக்க வீரசிங்க டி.சில்வா, லங்கா புவத் பணிப்பாளர் பிரதீப் குணவர்தன ஆகியோர் கூட்டாக இணைந்து இந்த அறிவித்தலை விடுத்தனர். லங்கா புவத் நியூஸ் அலேர்ட் வசதி தேவைப்படும் மொபிடெல் வாடிக்கையாளர் சயன்ஸ் லேண்ட் கோபரேஷன் லிமிட்டட்டின் திபஸ் எம்.ஈ.என்ற மென்பொருளை டவுன்லோர்ட் செய்து கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் தமிழில் நியூஸ் அலேர்ட் பெற வேண்டுமாயின் செய்திகள் என்று டைப் செய்து 2233 என்ற இலக்கத்துக்கு எஸ்.எம்.எஸ்.செய்வதன் மூலம் இந்த வசதியைப் பெறலாம்.

சிங்கள மொழியில் நியூஸ் அலேர்ட் டைப் பெற்றுக்கொள்வதற்கு புவத் என்று டைப் செய்து 2233 என்ற இலக்கத்துக்கு எஸ்.எம்.எஸ்.செய்வதன் மூலம் ஒருவர் பெற்றுக் கொள்ள முடியும். (அ-5)

# மக்கள் கண்காணிப்புக்குழு வடக்கு கிழக்கில் பணியாற்ற அனைத்துலகம் உதவ வேண்டும்

## மனோ கணேசன் வேண்டுகோள்

வடக்கு-கிழக்கில் மக்கள் கண்காணிப்புக் குழு பணியாற்ற அனைத்துலகம் உதவ வேண்டும் என்று அக்குழுவின் நிர்வாகியும் மேலக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் வலியுறுதியுள்ளார். இது தொடர்பில் அவர் கூறியதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவுகிறார்கள் என்றும் பணம் அறவிடவும் முன்னர் கடத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தற்போது வரவு-செலவுத்திட்ட அறிக்கை மீது வாக்களிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை மருமகன் கடத்தப் பட்டுள்ளார். இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வரும் கடத்தல்களில் இது புதிய பரிமாணமாகும்.

வடபகுதயில் கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பாக எண்ணற்ற முறைப் பாடுகள் வந்துள்ளன.

தற்போதைய சூழலில் வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் கண்காணிப் புக்குழு செயற்பட அனைத்துலக சமூகம் ஆதரவளிக்க வேண்டும்.

எமது கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் வடக்கு அல்லது கிழக்கு செல்வதில் பாரிய சிக்கல் உள்ளது.

இது தொடர்பில் எதிர் வரும் வாரம் கனடா, ஜப்பான் மற்றும் ஜெர்மன் நாடுகளின் தூதர்களை சந்திக்க உள்ளேன். வடக்கு கிழக்கில் நாம் பணியாற்ற உதவு மாறு எழுத்து பூர்வமாக வேண்டுகோள் விடுக்கவுள் ளோம் என்றார் மனோ கணேசன். (அ-5)

# ஆயிரம் இலங்கை தாதியர்களுக்கு அமெரிக்காவில் வேலை வாய்ப்பு

இவ்வருடம் முதல் ஆயிரம் பயிற்சி பெற்ற தாதியர்களை அமெரிக்காவிற்கு அனுப்புவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் செய்துகொள்ளவுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1000 தாதியர்கள் கலிபோர்னியாவிற்கு அனுப்பப்படவுள்ளனர். இவர்கள் கலிபோர்னியாவில் இரு வருடங்கள் சேவையாற்றுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய இராஜ்யம் அமெரிக்கா, சீனா, இத்தாலி, அவுஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளில் இலங்கை தாதியர்கள் பெரிதும் விரும்பப்படுகின்றனர்.

இவ் ஒப்பந்தத்தினை சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெந்திஸ், தாதியர் சேவையின் உதவி பணிப்பாளர் எம்.சமரநாயக்க ஆகியோர் கலிபோர்னிய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சருடன் செய்து கொள்ளவுள்ளனர் என அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித் துள்ளது. (அ-5)

# லேப்-டாப் பயன்படுத்தினால் ஆண்மை குறையும் ஆபத்து

ஆண்களே! நீங்கள் லேப்-டாப் கம்யூட்டர்களை பயன்படுத்துகிறவர்களா நீங்கள்! சற்று கவனமாக இருங்கள். லேப்-டாப் கம்யூட்டர்களை அதிக நேரம் பயன்படுத்துகிற ஆண்களுக்கு ஆண்மைத் தன்மை குறைந்து மலட்டுத்தன்மை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியில் இது தெரியவந்துள்ளது.

மடியில் லேப்-டாப்பை அதிக நேரம் வைத்திருக்கும் போது அதில் இருந்து வெளியாகும் வெப்பம் ஆண்களிடம் மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும். 29 ஆண்களிடம் இந்த சோத னையை அவர்கள் நடத்தியுள்ளனர்.

இவர்கள் 21 வயது முதல் 35 வயதுவரை உள்ளவர்கள். எனவே பாதுகாப்பான உடைகளை அணிந்துகொண்டு லேப்-டாப்பை சரியான நிலையில் வைத்துக்கொண்டு அதை பயன் படுத்த வேண்டும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு மணி நேரத்திற்கு மேலாக 2.7 டிகிரி செல்சியஸ் வெப்பம் வெளிவந்தாலும் அது பாதிப்பை ஏற்படுத்தும்.

# ஜாமீனில் வெளியே வந்த வைகோ ஜெயலலிதாவைச் சந்தித்தார்

(சென்னை)

அ.தி.மு.க பொது செயலாளர் ஜெயலலிதாவை போயஸ் கார்டனில் உள்ள அவரது இல்லத்தில்ம.தி.மு.க பொது செயலாளர் வைகோ சந்தித்து பேசினார்.

தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப்புலிகளுக்கு யார் ஆதரவு அளித்தாலும் அது தேச விரோ தம் தான் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கருத்துத் தெரிவித்திருந்த நிலையில் விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு தலைவர் சு.ப.தமிழ்ச் செல்வன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பேரணி சென்னையில் நடந்தது.

பொலிஸ் அனுமதியின்றி நடந்த இந்த பேரணியில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் கலந்து கொண்டார். இதனால் வைகோ மற்றும் தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ. நெடுமாறனை பொலிஸார் கைதுசெய்து ஜெயிலில் அடைத்தனர். அதைத் தொடர்ந்து வைகோ ஜாமீனில் வெளியே வந்தார்.

இந்த சம்பவங்களுக்கு பிறகு முதல் முறையாக வைகோ அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை நேற்று முன்தினம் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ரோகித பதவி விலக வேண்டும் ஜோன் அமரதுங்க கோரிக்கை

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஐ.தே.க.வின் ஜோன் அமரதுங்க இது தொடர்பில் கூறியதாவது,

பொது நலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்ட விடயத்தில் ரோகிதவின் செயற்பாடானது பாரிய இராஜதந்திர பிழையாகும்.

அவர் பதவி விலக வேண்டும். பதவி விலகாவிட்டால் அவரை பதவியிலிருந்து மஹிந்த விலக்க வேண்டும். ரோகித விலக்கப்படாவிட்டால் அது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றார்.



'பாகிஸ்தான் நீக்கத்தை ரோகித ஆதரித்தது. சிறிலங்காவின் தவறு' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் லக்ஸ்மன் கிரியெல்லவும் தெரிவிக்துள்ளார். (அ-5)

# திடீர் உடல் நலக்குறைவால் அக்தர் ஆஸ்பத்திரியில் அனுமதி

கொல்கத்தா டெஸ்ட் தொடங்க 2 நாட்களே உள்ள நிலையில் பாகிஸ்தான் வீரர் உடல் நலக்குறைவு காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்.

கொல்கத்தா வந்த பாகிஸ்தான் கிரிக்கெற்



அணியின் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தருக்கு நேற்று முன்தினம் மாலை திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் உடனடியாக கொல்கத்தாவில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவர் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். மேலும் நெஞ்சு எரிச்சலுடன் கூடிய வலியும் இருக்கிறது. டாக்டர்கள் அவரை முழுமையாக பரிசோதித்த பிறகு தகுந்த சிகிச்சை அளித்து வருகிறார்கள் எனவே 2ஆவது டெஸ்டில் அக்தர் விளையாட வாய்ப்பு குறைவு தான். ஏற்கனவே முகமது ஆசிப் காயத்தால் இந்த சுற்றுப் பயணத்தில் இடம் பெறவில்லை. மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் உமர்குல்லும் காயத்தில் சிக்கி உள்ளார். இந்த நிலையில் அக்தருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டிருப்பது பாகிஸ்தான் அணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. அவர் ஆஸ்பத்திரியில் இருந்து இன்று விடுவிக்கப்படுகிறார். அக்தர் முதல் டெஸ்டில் 6விக்கெற் கைப்பற்றினார். என்பது குறிப்பிடத்தக்கது.

அக்தர் தவிர மற்றொரு பாகிஸ்தான் வீரர் மிஸ்பா உல்-ஹக் ஏற்கனவே காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். ஆனால் ஆஸ்பத்திரியில் பரிசோதனை செய்த பிறகு அவர் ஒட்டலுக்கு திரும்பி விட்டார். அங்கு டாக்டர் ஜாய் பாசு அவருக்கு சிகிச்சை அளித்தார். மிஸ்பா வேகமாக தேறி வருகிறார்.

டெல்லியில் பயிற்சி செய்த போது கணுக்காலில் காயமடைந்த பாகிஸ்தான் அணியின் தலைவர் சோயிப் மலிக்குக்கு காயம் பெரிய அளவில் இல்லை என்று அணி நிர்வாக வட்டாரம் கூறியுள்ளது.

மலிக் 2வது டெஸ்ட்டுக்குள் காயத்தில் இருந்து குண மடைந்து விடுவார் என்று அணியின் ஊடக முகாமையாளர் தெரிவித்தார். (அ-5)

# கொல்கத்தா டெஸ்டில் தொடக்க ஆட்டக்காரராக யுவராஜ்சிங்குக்கு வாய்ப்பு கிடைக்கும்?

இந்திய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் 20 ஓவர் போட்டி ஒரு நாள் போட்டியில் கலக்கி வரும் அவருக்கு டெஸ்டில் 11 பேர் அணியில் வாய்ப்பு கிடைக்காமல் உள்ளது. இது ரசிகர்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தி வருகிறது.



மத்திய வரிசையில் டிராவிட், டெண்டுல்கர், கங்குலி, லட்சுமண் வலுவாக இருப்பதால் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. பாகிஸ்தானுக்கு எதிரான டெல்லி டெஸ்டில் மத்திய வரிசையில் கங்குலி, லட்சுமண் சிறப்பாக ஆடினார்கள். இதனால் யுவராஜ்சிங்குக்கு கொல்கத்தாவில் நடைபெறும் 2வது டெஸ்டிலும் மத்திய வரிசையில் வாய்ப்பு கிடைப்பது கடினம். ஆனால் தொடக்க வீரராக ஆடும் வாய்ப்பு அவருக்கு வழங்கலாம். தினேஷ் கார்த்திக் டெல்லி டெஸ்டில் இரண்டு இன்னிங்சிலும் சரியாக ஆட வில்லை. இதனால் தினேஷ் கார்த்திக்குக்கு பதிலாக யுவராஜ் சிங்கை களம் இறக்கலாம். டெல்லி டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்றதால் அதே வீரர்களையே அணி நிர்வாகம் களம் இறக்கும். அணித் தலைவர் கும்ளே கூறும்போது இங்கிலாந்து தொடரில் தினேஷ்கார்த்திக் சிறப்பாக விளையாடினார். ஒரு டெஸ்ட் ஆடாததை வைத்து எதுவும் சொல்ல முடியாது என்றார். இந்த கருத்து மூலம் அணியில் மாற்றம் செய்யப்படமாட்டாது என்று கருதப்படுகிறது. (அ-5)

## நுரை பொங்கச் சீறிப்பாயும் மடைதிறந்த வெள்ளம்



(டயோன்)

தைவானை நோக்கி மிடாக் என்ற கடும் சூறாவளி நெருங்குவதாக அந்நாட்டு வானிலை மையம் சில நாட்கள் முன் எச்சரித்தது. தைவானை விட்டு திடீரென திசை மாறிய சூறாவளி பிலிப்பைன்ஸைப் பதம் பார்த்தது. எனினும் தைவானில் பலத்த காற்றுடன் மழை கொட்டித் தீர்த்தது.

எனவே முன்னெச்சரிக்கையாக டயோன் மாநிலத்தின் ஷிய்மென் அணையை அதிகாரிகள் திறந்து விட்டனர். மடை திறந்த வெள்ளமாக நுரை பொங்கியபடி நீர் சீறிப் பாயும் காட்சி இது. அதற்கு முன்பு அணையின் மேல் பகுதியில் சிரித்தபடி நின்று போட்டோ எடுத்துக்கொள்கிறார் இந்தச் சுற்றுலாப் பயணி. (அ-5)

## வயதானவர்களுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்ட ரோபோ



(டோக்கியோ)

அடுப்பில் இருந்து சூடான பானை எடுத்து தட்டில் வைக்கும் முயற்சியில் இருக்கிறது டிவென்டி என்ற ரோபோ. அதற்கு எதிரே உட்கார்ந்து சாலட் தயாரித்துக்கொண்டு இருப்பவர் ஜென்கிபியூஜி. ஜப்பானின் டோக்கியோ நகரில் உள்ள வசிடீ பல்கலைக்கழக ஆய்வு மையத்தில் தான் இந்த காட்சி. இந்த ரோபோ வயதான வர்களுக்கு தேவையான உதவிகளை செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதனுடன் சேர்ந்து வேலை செய்யும் ஜென்கி அப்பல்கலைக்கழக மெக்கானிகல் என்ஜினியரிங் மாணவர் 1.5 மீட்டர் உயர முடைய இந்தரோபோ 111 கிலோ எடை உடையது. பாட்டரியால் இயங்கும் பேராசிரியர் ஷிகேகி சுகானா என்பவர் இதை வடிவமைத்துள்ளார். (அ-5)

# இராணுவத்தை உற்சாகப்படுத்த அமெ.அழகிகள் குத்தாட்டம்



(பாக்தாத்)

அமெரிக்க விமான படை வீரர்கள் ஆவலுடன் அமர்ந்திருக்க அவர்கள் முன் அட்டகாச ஆட்டம் போடுகின்றனர் இளம் பெண்கள். ஈராக்கின் பாக்தாத் நகரில் இருந்து 20கி.மீ.தொலைவில் உள்ள இராணுவ மையத்தில் தான் இந்த காட்சி.

இந்த பெண்கள் வாஷிங்டன் நகரைச் சேர்ந்தவர்கள். அங்கு கால்பந்து போட்டி நடைபெறும் போது மைதானத்தில் ஒரு ஓரத்தில் நடனமாடி பார்வையாளர்களை பரவசப்படுத்துபவர்கள்.

இப்போது இராணுவ வீரர்களுக்கு உற்சாகம் தருவதற்காக அவர்கள் பாக்தாத் நகருக்கு வரவழைக்கப்பட்டனர்.

அங்கு அவர்களின் நடனம் வீரர்களுக்கு ரொம்பவும் சந்தோஷத்தை தந்ததாம். (அ-5)

# இலங்கை டெஸ்ட் தொடரில் நடுவர் கொயர்ட்சன் நீக்கம்

இலங்கை -இங்கிலாந்து அணிகள் இடையே இலங்கையில் நடக்க உள்ள 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கு நடுவராக நியமிக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்காவை சேர்ந்த ரூடி கொயர்ட்சனை திடீரென ஐ.சி.சி. திரும்ப பெற்றுள்ளது.

அவருக்கு பதிலாக பாகிஸ்தானை சேர்ந்த அலிம்தர் நடுவராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். சமீபத்தில் ஆவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்டில் இலங்கை வீரர் சங்கக்கரா கொயர்ட்சனின் தவறான தீர்ப்பால் 8 ஓட்டங்களில் இரட்டை சதம் அடிக்கும் வாய்ப்பை பறிகொடுத்தார்.

இலங்கை பத்திரிகைகள் கொயர்ட்சனுக்கு கண்டனம் தெரிவித்து செய்திகள் வெளியிட்டு இருந்தன. அவருக்கு எதிர்ப்பு கிளம்பியதால் ஐ.சி.சி.அவரை திரும்பி பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகி றது. (அ-5)

# பயிற்சிப் போட்டியில் இங்கிலாந்து வெற்றி

(கொழும்பு)

இலங்கை பிரசிடென்ட் லெவன் அணிக்கு எதிரான மூன்று நாள் கொண்ட டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து லெவன் அணி 5 விக்கெற் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட




தொடரில் பங்கேற்கவுள்ளது.

தொடருக்கு முன் இலங்கை பிரசிடென்ட் லெவன் அணிக்கு எதிரான 3 நாள் கொண்ட பயிற்சி போட்டியில் விளையாடியது முதல் இன்னிங்சில் இலங்கை பிரசிடென்ட் 298, இங்கிலாந்து லெவன் 134 ஓட்டங்கள் எடுத்தன. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை விளையாடிய இலங்கை பிரசிடென்ட்லெவன் அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெற் இழப்புக்கு 77 ஓட்டங்கள் எடுத் திருந்தது. நேற்று முன்தினம் போட்டியின் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. இலங்கை பிரசிடென்ட் லெவன் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து 81 ஓட்டங்கள் மாத்திரம் எடுத்தது. இதன்மூலம் இங்கிலாந்து லெவன் வெற்றிக்கு 246 ஓட்ட வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை விரட்டிய இங்கி லாந்து லெவன் அணிக்கு குக்கின் (58) அரைசதம் அசத்தல் துவக்கமாக அமைந்தது. வான்(28) ஆறுதல் அளித்தார். அதிரடியில் மிரட்டிய பீட்டர்சன் 1 சிக்சர் 5 பவுண்டரி உட்பட 59 ஓட்டங்கள் குவித்தார். மிடில் ஆர்டரில் ஷா (33) பிரியர் (27) பொறுப்புடன் துடுப்பாட இங்கிலாந்து லெவன் அணி 61 ஓவர்களில் 247 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் டிசம்பர் 1ஆம் திகதி கண்டியில் துவங்குகிறது. (அ-5)

# உல்லாசமாக வாழும் கேரளப் பிச்சைக்காரர்

(கொச்சி)

பிச்சை எடுத்து உல்லாசமாக வாழ்கிறார் கேரள பிச்சைக்காரர் ஒருவர். விமானத்தில் பறந்து சென்று பிச்சை எடுத்த அனுபவம் கூட இவருக்கு உண்டு.

காசர் கோட்டைச் சேர்ந்தவர் முகமது அலி. வயது அறுபது. சொந்த ஊரில் அரை ஏக்கர் நிலமும் வீடும் உள்ளது. வங்கி வைப்புத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் உள்ளது. ஓட்டல்களில் தினமும் விலை உயர்ந்த உணவைத் தான் சாப்பிடுவார்.

ஒரு வேளையாவது பிரியாணி சாப்பிடாமல் இருக்க மாட்டார். மிகவும் பிரபலமான மில் தயாரிப்புகளில் 14 ஜோடி ஆடைகளை வைத்திருக்கிறார். சொந்த ஊரில் பெரும் தொழிலதிபர் போல் உடை அணிந்து தான் நடமாடுவார். கௌரவமான பணியில் இருப்பதாக ஊர்க்காரர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு ஆடம்பரமாக வசிக்கும் இவருக்கு வருமானம் எப்படி கிடைக்கிறது.

பிச்சை எடுக்கிறார். அதுதான் இவரது தொழில். கேரளாவில் மசூதிகளில் தங்கி புதுப் புது இடங்களில் பிச்சை எடுப்பதில் பணம் சம்பாதித்து உல்லாசமாக வாழ்கிறார். தினமும் 250 ரூபாய் வரை பிச்சை மூலம் பார்த்து விடுவார். விஷேட நாட்களில் ஆயிரம் ரூபாய் சாதாரணமாக கிடைத்துவிடுகிறது. கந்தல் அழுக்கான உடைகளை கட்டிக் கொண்டு பிச்சை எடுப்பார். தொழில் முடிந்ததும் மாற்று உடைக்கு மாறிவிடுவார். கிடைத்த பணத்தை உல்லாசமாக செலவிடுவார்.

## உலக தரிசனம்

விமானத்தில் பறக்க வேண்டும் என்று ஆசை இவருக்கு ஏற்பட்டது. கோழிக்கோடு விமான நிலையத்தில் விசாரித்தார். டிக்கெற் வாங்கி விமானத்தில் பயணம் செய்து கொச்சியில் இறங்கினார்.

அங்கிருந்து திரும்பி வர போதிய பணம் இல்லாததால் அழுக்கான லுங்கிக்கு மாறி ரயிலில் பிச்சை எடுத்துக்கொண்டே ஊர் திரும்பி விட்டார். (அ-5)

# கறையானில் இருந்து எரிபொருள் தயாரிக்க விஞ்ஞானிகள் முயற்சி

(பாரிஸ்)

எந்தவித செயற்கை பொருட்களும் சேர்க்காமல் இயற்கை எரிசக்தியை ஏற்படுத்த கறையான் உதவுகிறது என்பதை அமெரிக்க நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பெட்ரோல், டீசல் பயன்பாட்டால் உலக வெப்பமயமாதல் அதிகரித்து வருவதை அடுத்து அதை தடுக்க அதிரடி நடவடிக்கைகளில் பல நாடுகளும் இறங்கியுள்ளன. உலக வெப்பமயமாதல் அதிகரித்தால் பெரும் வானிலை மாற்றம் ஏற்பட்டு இயற்கை அழிவுகள் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்ததை அடுத்து பெட்ரோல், டீசல் பயன்பாட்டை குறைத்து இயற்கை மாற்று எரிபொருளை பயன்படுத்தும்படி பல நாடுகளையும் ஐ.நா. சபை கேட்டுக் கொண்டுள்ளது. காட்டாமணக்கு உட்பட தானியங்கள் மூலம் கிடைக்கும் எண்ணெய்கள் சர்க்கரை கழிவுகள் போன்றவற்றைக்கொண்டு இயற்கையான மாற்று எரிபொருளை உற்பத்தி செய்யமுடியும் என்று அமெரிக்கா முதல் இந்தியா வரை பல நாடுகளும் ஆராயவும் பரிசோதனை செய்யவும் ஆரம்பித்துவிட்டன. இப்போது அமெரிக்கா வித்தியாசமான முறையில் இயற்கை எரிபொருளை உருவாக்கலாம் என்று கண்டுபிடித்துள்ளது. இது தொடர்பாக விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

கறையான் ஒவ்வொருவர் வீட்டிலும் கதவு, யன்னல், மரங்களை அரித்து பாழ்படுத்தி விடும். அவற்றைக்கண்டாலே பலருக்கும் அலர்ஜி அதை ஒழிப்பதற்கு இராசன மூலம் தயாரிக்கப்பட்ட கிரிமிநாசினி மருந்துகளை தெளிக்கவேண்டும். கறையானை வைத்து இயற்கை எரிபொருளை தயாரிக்க முடியும் என்பது குறித்து அமெரிக்க கறையான் ஆராய்சி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். பல கோடிகளை போட்டு இந்த ஆராய்ச்சிகள் நடந்து வந்தாலும் இன்னும் பல பரிசோதனைகளும் ஆய்வுகளும் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அடுத்த தலைமுறைக்கு தான் இயற்கை எரிபொருளாக இதை பயன்படுத்த முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். கறையானின் குடல் பகுதியில் இருந்து என்சைம்களை எடுத்து அதன் மூலம் இயற்கை எரிபொருள் தயாரிக்க விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர். (அ-5)

சமாதானம் செய்து வைப்பவர் ஒருபோதும் தோல்வி அடைந்ததில்லை.

~ அயர்லாந்து

வலம்புரி

# சமாதானத் தூதுக்குழு நாட்டில் உருவாக வேண்டும்

நாட்டின் தற்போதைய சூழ்நிலை விரும்பத்தகாத முறையில் அமைந்துள்ளது. எங்கும் துன்பகரமான நிகழ்வுகளே நடந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் சமாதானத்தின் நினைப்புகள் மங்கிச் செல்கின்றது. உலக நாடுகளின் கருத்துக்களும் ஆலோசனைகளும், அவற்றிற்கு நேரம் கிடைக்கும்போது தெரிவிக்கும் அளவிலேயே இலங்கை விவகாரத்தை அந்நாடுகள் கையாள்கின்றன. எனவே இலங்கையில் யுத்தம்–அழிவு எந்தளவு தூரம் வியாபித்தாலும் அதுபற்றி சர்வதேச சமூகத்திற்கு அக்கறையில்லை என்பது வெளிப்படையாகிவிட்டது.

எனவே நாட்டில் உச்சம் கண்டுள்ள போரை நிறுத்துவதற்கு வல்ல்மை வொருந்திய சமாதானக் குழு உருவாகவேண்டும். இந்த சமாதானக் குழுவில் சமாதானத்தை விரும்பும் சகலரும் இணைந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதேவேளை சமாதானக் குழு எந்தவித அரசியல் செல்வாக்கிற்கும், மதச் செல்வாக்கிற்கும் உட்படாமல் 'மனிதம்', 'மனித உயிர்' என்ற ஒரே நோக்கில் தமது பணியை மேற்கொள்வது அவசியம். இந்த சமாதானக் குழுவை நாட்டின் பிரதம நீதியரசர் கூட வழிப்படுத்தலாம்.

இதில் யுத்தம் வேண்டவே வேண்டாம் எனக் கூறும் முன்னாள் விமானப் படைத்தளபதி ஹரி குணத்திலக்க இடம்பெறலாம். இலங்கையில் சகல இன மக்களும் ஒற்றுமையாக–சகல உரிமைகளும் பெற்று வாழவேண்டுமெனக் கூறும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண அங்கம் பெறலாம்.

சமாதானத்தை விரும்பும் மதத் தலைவர்கள் சமாதானக் குழுவில் சேரலாம். சமாதானத்தை உண்மையாக நேசிப்பவர்களே இன்று நாட்டிற்கு தேவையானவர்கள்.

அரசியல்வாதிகள் யதார்த்தத்தை' புரிந்து கொண்டு பேச வேண்டும். நாம் எதுவும் செய்வோம் எனக் கூறுவதானது அழிவிற்கு வழிவகுக்குமேயன்றி ஆக்கத்தை ஒருபோதும் அது தரமாட்டாது.

குண்டுவெடித்தால்–விமானம் தாக்கினால் அதனால் ஏற்படும் அழிவுகளைக் கண்டு இரக்கமுற வேண்டும். இந்த நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் இந்த அநியாய அழிவுகளை தடுக்க முடியுமல்லவா? என்ற நினைப்பை இதயங்களில் சுமக்கவேண்டும்.

இன்றைய அரசியல்வாதிகளின் போக்கு யுத்தத்தை ஊக்குவிப்பதாக இருக்கின்றதேயன்றி சமாதான இலக்கை அடைவதாக இல்லை. இத்தகைய அரசியல் போக்கு மற்றவர்களிடையே–இளம் சமூகத்திடையே ஆழமாக ஊன்றிவிடுமாக இருந்தால் எதிர்கால நிலைமை எவ்வாறாக அமையும் என்பதை நினைத்துக் கூட பார்ப்பதற்கு அச்சமாக உள்ளது.

எனவே நாட்டின் மோசமான இன்றைய நிலையில் உள்நாட்டில் சமாதானக் குழு உடன் உருவாக வேண்டும்.

# இராணுவம் பற்றிய தகவல்களை அறிய புலிகள் உயர் தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர்

## 'த பொட்டம்லைன்' பத்திரிகை தகவல்

இராணுவத்தினர் பற்றிய தகவல்களை அறிய விடுதலைப் புலிகள் உயர் தொழில்நுட்பங்களையும், கணனி மென் பொருட்களையும்பயன்படுத்தி வருவதாக 'த பொட்டம்லைன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அந்த இதழில் வெளியாகியுள்ள செய்தி விபரம்,

விடுதலைப்புலிகளின் விமானப்படையை வடிவமைப்பதில் பிரதான பங்கு வகித்தவர் கேணல் சங்கர். அவர் ஒரு விமானப் பொறியியலாளர்,சங்கருக்குப் பின்னர் ரத்னம் மாஸ்ரர் தற்போது வான் படையின் கட்டளைத் தளபதியாக பணி யாற்றி வருகின்றார். ரத்னம் மாஸ்ரர் என்பது அவரது இயக்க பெயராகும். அவரது உண்மையான பெயர் யாருக்கும் தெரியாது.

ரத்னம் மாஸ்ரர் சரளமாக ஆங்கிலம் பேசுவார்,அவர் அவுஸ்திரேலியாவில் வான் பொறியியல் கல்வி பயின்றவர். அதன் பின்னர் அமெரிக்கா சென்று விமானம் ஓட்டும் பயிற்சிகளையும் பெற்றிருந்தார். தற்போது விடுதலைப் புலிகள் வசம் 10 விமானிகள் உள்ளனர் .அவர்கள் அனைவரும் ரத்னம் மாஸ்ரரின் கட்டளையின் கீழ் பணியாற்றுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனியே வான் படையின் பொறுப்பில் இருப்பதாக சில தகவல்கள் தெரிவித்திருந்தன. ஆனால் அது உண்மையல்ல. சாள்ஸ் அன்ரனி தகவல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்றவர்.

கிளிநொச்சியில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சென்ற விடுதலைப் புலிகளின் 8 உறுப்பினர்கள் அங்கு கண்னி மென் பொருள் மற்றும் பொறியியல் கல்விகளை பயின்றுள்ளனர். அவுஸ்திரேலியாவின் பிரபல பல்கலைக்கழகமான மொனாஷ் பல்கலைக்கழகத்தில் கல்வியைப் பயின்ற பின்னர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு வன்னிக்கு திரும்பியுள்ளனர். அவர்கள் தம்முடன் செய்மதி மொடம் மற்றும் லப்டொப் கணனிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

தகவல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களினால் தான் அவர்களின் இணையத்தளங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

கணனிகளில் இருந்து தகவல்களை கையகப்படுத்தும் மென்பொருட்களையும் அமெரிக்காவில் இருந்து விடுதலைப் புலிகள் பெற்றுள்ளனர். இதன்மூலம் அவர்கள் படையினரின் முக்கிய மையங்கள்,கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்,விமானநிலையங்கள்,துறைமுகங்கள்,மின்சக்தி நிலயங்கள் போன்றவற்றிற்குள் ஊடுருவி தகவல்களைப் பெற்று வருகின்றனர்.

இது தொடர்பில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கான புலனாய்வு தகவல்கள் சேகரிக்கப்படுவதாக பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை புலிகளென குற்றம் சாட்டுவதை ஏற்கமுடியாது

## ஐ.தே.க.எம்.பி. சரத் ரணவக்க கருத்து

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் புலிகள் என குற்றம் சாட்டப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்களின் துயரங்களை கருத்தில் கொண்டே வரவு–செலவுத்திட்டத்திற்கு எதிராக அவர்கள் வாக்களித்தனர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் மேலதிக தேசிய அமைப்பாளர் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சரத் ரணவக்க தெரிவித்தார்.

அரசாங்கத்தரப்பிற்கு வருமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், நான் ஐக்கிய தேசியக்கட்சியை விட்டு வர மாட்டேன் என தெளிவாக அழைப்பு விடுத்தவர்களிடம் தெரிவித்துள்ளேன்.

தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படும்வரை எனது முடிவில் மாற்றம் இல்லை என்றும் அவர் கூறினார். கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே சரத் ரணவக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இங்கு மேலும் கூறியதாவது.

ஐக்கிய தேசியக்கட்சியையும் ஜே.வி.பியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தேசத்துரோகிகளாக குறிப்பிடுபவர்கள், தேசப்பற்றாளர்களாக தம்மை இணங்காட்டிக்கொள்ள முனைகின்றனர். பிக்குமார்கள் அரசியலில் குதித்துள்ளதுடன் ஊழல், மோசடிகளிலும் மிக சர்வசாதாரணமாக ஈடுபட்டும் வருகின்றனர். காணிகளை முறையற்ற விதத்தில் சுவீகரித்துக் கொண்டு அதனை கையகப்படுத்தும் கைங்கரியத்தில் பிக்குமார்கள் இன்று ஈடுபட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல இலட்சம் ரூபா பெறுமதியான காணிகளை அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியும் அச்சுறுத்தியும் கையகப் படுத்தியுள்ள பிக்குமார்களை தேசப்பற்றாளர்களாக குறிப்பிட முடியுமா?

இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களே எம்மை தேசத்துரோகிகளாக குறிப்பிடுகின்றனர். தற்போதைய அரசியல் நிலைவரத்தை கருத்தில் கொண்டே ஜே.வி.பி. வரவு–செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளது. இவர்களையும் கூட இன்று தேசத்துரோகிகளாக கூறுகின்றனர். காணிகள் சட்டவிரோதமாக கையப்படுத்தப்படுவதற்கு ஜனாதிபதியும் காணி சீர் திருத்த ஆணைக்குழுவின் தலைவர் லக்ஷ்மன் கிரிமுத்துவுமே பொறுப்புக்கூற வேண்டும். இது தொடர்பில் நாம் இலஞ்ச ஊழல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளோம் . அத்து டன், நீதிமன்றத்திலும் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளோம். (அ-5)

# எது விதையோ அதைச் சார்ந்ததே பழமும்



கர்மாவினால் மனிதன் பிறவி எடுக்கிறான். கர்மமே மனிதனுக்குத் தெய்வம். கர்மமே சுக துக்கங்க ளுக்கு காரணம். எது விதையோ அதைச் சார்ந்ததே பழமும். என்ன உணவோ அதற் கேற்றதே ஏப்பமும். இதிலிருந்து தப்பமுடியாது .ஆனால் இறைவன் அருளிருந்தால் எத் தகைய சூழ்நிலையிலிருந்தும் விடுபட முடியும். ஆகவே மனி தன் இறைவன் அருளைப் பெற அதற்குத் தகுந்த முயற்சி செய்ய வேண்டும்.

கடவுள் ஆனந்த மயமானவர். சச்சிதானந்தவடிவம்! நிரந்தரமான ஆனந்தம். எந்தவடிவமும் எடுக்கக் கூடிய வர்! இப்படி அப்படி என யாரும் நிர்ணயித்துக்கூற இயலாத வர்! ஆகையால் தெய்வத்தை நாம் விடாது சிந்திக்க வேண்டும். ஆனந்திக்க வேண்டும். நிர்மலமான இதயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் .இதன் மூலம் தான் தெய்வத்துவத்தை அனுபவிக்க முடியும்.

# விமானத் தாக்குதல் குறித்து...

நேற்றுக்காலை நாடாளுமன்றம் தொடங்குவதற்கு முன்பாக பெற்றுக் கொண்டார்.

அதன்படி நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வு தொடங்கியதும் மாவை.சேனாதிராஜா அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றத் தொடங்கினார். ஆனால் அவர் உரையாற்றுவதற்கு ஜே.வி.பியின் விமல் வீரவன்ச ஆவேசமாக எதிர்ப்புத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று மாவை. சேனாதிராஜா குறிப்பிடுவது நாடாளுமன்ற சட்டதிட்டங்களுக்கு முரணானது என்றும் வான் தாக்குதல் குறித்து இங்கு பேச முடியாதென்றும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவருக்கு ஆதரவாக அரச தரப்பினரும் நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டனர்.

மேலும் நாடாளுமன்ற ஒத்திவைப்பு நேரத்தில் சிவாஜிலிங்கம் உரையாற்றுவதற்கான நேரம் வழங்கப்பட்டிருப்பதால் மாவை.சேனாதிராஜாவுக்கு தற்போது நேரம் கொடுக்கக் கூடாது என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதனால் மிகவும் காரசாரமான கருத்துப் பரிமாறல்கள் நிகழ்ந்தன. அரச தரப்பின் சார்பில் பேசிய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அநுராதபுரம், மாவிலாறில் நடைபெற்ற தாக்குதல் குறித்தோ அல்லது டக்ளஸ் தேவானந்தா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்தோ எதுவும் பேச முடியவில்லை. ஆனால் கிளிநொச்சியில் தாக்குதல் நடத்தியவுடன்இங்கு பேச வருகின்றனர் என்றார்.

அதற்குப் பதிலளித்த மாவை.சேனாதிராஜா, சபாநாயகரே! உங்களிடம் அனுமதி பெற்றுத்தானே இந்த அறிக்கையை வெளியிட்டு உரையாற்ற இருந்தேன் என்று சபாநாயகரைப் பார்த்துக் கேள்வி கேட்டார்.

சபாநாயகர் பதில் கூறும் முன்னரேயே எழுந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சபாநாயகரிடம் மற்றும் அனுமதி பெற்றால் போதுமா எதற்காக அரசாங்கம் இருக்கின்றது என்றார்.

அதற்குப் பதிலளித்த மாவை. சேனாதிராஜா இப்படியான சிறப்பு அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிடுவதானால் சபாநாயகரிடம் மட்டுந்தான் அனுமதி பெறவேண்டும். வேறு எவரிடமும் அனுமதி பெற வேண்டும்என்ற சட்டம் இங்கு இருப்பது எனக்குத் தெரியாது.

அப்படி ஒரு சட்டம் நாடாளுமன்றத்தில் இருக்கின்றதா? என்றும் பதில் கேள்வி எழுப்பினார். இப்படி மாறிமாறி ஒவ்வொரு தரப்பினரும் வாக்குவாதப்பட்டனர். நிலைமை கட்டு மீறிப்போகவே ஜே.வி.பியினரின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்ட நேரத்தை ரத்துச்செய்வதாக சபாநாயகர் அறிவித்தார்.

மேலும் மாவை.சேனாதிராஜாவுக்கு இன்று அறிக்கை சமர்ப்பித்து உரையாற்ற அனுமதிப்பதற்குத் தாம் பரிசீலனை செய்வதாகவும் அவர் கூறினார். சபாநாயகரின் இந்த நடவடிக்கையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் விசனம் அடைந்தனர். (ச-5)

# செயலமர்வு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நாளை நடைபெறவுள்ள வரலாறு, புவியியல் வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக் கல்வியும் ஆகிய செயலமர்வுகள் எதிர்வரும் 3 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)





நுகேகொடவில் நேற்று மாலை குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்படுவதையும் தாக்குதலில் காயமடைந்த சிறுமி ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

# சமூக சேவைகள் அமைச்சு அலுவலகத்துள்...

குறித்து அவர் கூறியதாவது, நாரகேன் பிட்டியிலுள்ள சமூக சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் பொதுமக்களை டக்ளஸ் தேவானந்தா சந்தித்து வருவது வழக்கம். நேற்றுக்காலையும் அவரைச் சந்திப்பதற்காகப் பொதுமக்கள் அங்கு வருகை தந்திருந்தனர்.

பொதுமக்களைப் போன்றே பெண் தற்கொலைக் குண்டுதாரியும் அங்கு வரிசையில் நின்றுள்ளார். அவர் போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர் போன்று இருந்தார். அதனால் அவரை சோதனை செய்யாமலே யே பாதுகாப்புக் கடமையில் இருந்தோர் அலுவலகத்தின் உள்ளே செல்ல அனுமதித்துள்ளனர்.

எனினும் அந்த தற்கொலைக் குண்டுதாரியை டக்ளஸ் தேவானந்தாவின் பொது மக்கள் தொடர்பு இணைப்பாளர் ஸ்ரிபன் பீரிஸ் விசாரணை செய்ய முயற்சித்துள்ளார். அப்போது அந்தப் பெண் தற்கொலைக் குண்டுதாரி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்தார்.

இதனால் பொதுமக்கள் தொடர்பு இணைப்பாளர் ஸ்ரிபன் பீரிஸ் உள்ளிட்ட 3 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றார்.

காயமடைந்த மூவரும் மருத்துவமனைக்குக்கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி டக்ளஸ் தேவானந்தாவின் பொதுமக்கள் தொடர்பு இணைப்பாளர் ஸ்ரிபன் பீரிஸ் உயிரிழந்தார். அவருக்கு வயது-72. ஏனைய இருவரில் ஒருவர் ஈ.பி.டி.பி. உறுப்பினரான கற்கண்டு சித்திரன் (வயது-32) என்றும் மற்றவர் டக்ளஸ் தேவானந்தாவின் மெய்ப் பாதுகாவலரான அசோகன் எனத் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தையடுத்து அங்கு அதிரடிப் படையினர் விரைந்தனர். மேலதிக பொலிஸார் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டனர்.

குண்டுத் தாக்குதல் நிகழ்ந்த அலுவலகத்திற்குள் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. அப் பகுதியில் தீவிர பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போது அலுவலக வாசலில் சுமார் 50 ற்கும் அதிக மான பொதுமக்கள் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திப்பதற்காக வரிசையில் நின்றனர். எனினும் அவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற் படவில்லை.

இச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிப் பெண்ணே இத் தாக்குதலை நடத்தியிருப்பதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெறுகின்றது என்றார்.

டக்ளஸ் தேவானந்தாவை குறிவைத்து 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் அமைந்திருந்த அவரது அமைச்சுக் கட்டடத்திற்குள் பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தாக்குதல் நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ச-

# இலங்கைக்கு ஈரான் ஆயுத...

ஈரான் தனது அணுசக்தி திட்டங்களை சர்வதேச அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிசோதனைக்கு திறந்துவிட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது.

ஒக்டோபர் மாத இறுதியில் ஈரானுக்கு எதிராக பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. இந்நிலையில் இலங்கை ஜனாதிபதியின் ஈரான் விஜயம் தொடர்பில் நான் தனிப்பட்ட ரீதியில் கருத்துக் கூற விரும்பவில்லை.

ஏனெனில் ஈரான் தொடர்பான எமது கொள்கை இலங்கைக்கு மிகவும் தெளிவாகத் தெரியும். எனினும் ஈரானிடமிருந்து இலங்கை ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களை கொள்வனவு செய்யுமாயின், அது ஐ.நா. பாதுகாப்பு சபையின் ஈரானுக்கு எதிரான தீர்மானத்தின் 1747 ஆம் பிரிவை மீறுவதாக அமையும் என்றார். (ச-5)

# தற்கொலைத் தாக்குதலுக்கு...

பெண் குண்டுதாரியால் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் எமது கொழும்பு மாவட்ட அலுவ லகப் பொறுப்பாளர் தோழர் ஸ்ரீபன் பீரிஸ் பலியாகியுள்ளார். அமைச்சரின் மெய்ப் பாது காவலரில் ஒருவரான சித்திரன் காயங்களுக்குள்ளாகியுள்ளார். ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தரும் காயமடைந்துள்ளார். அதிர்ஷ்டவசமாக அந்த வேளையில் அமைச்சரைச் சந்திக்க வந்திருந்த பொதுமக்கள் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

புலிகளினால் தன்னைக் கொலை செய்ய முடியாது என்றும் இத் தாக்குதலில் எமது நீண்ட கால உறுப்பினரான தோழர் ஸ்ரீபன் கொல்லப்பட்டதே பெரும் இழப்பாகும் என்றும் அமைச்சரும் எமது செயலாளர் நாயகமும் ஆகிய தோழர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தன்னைக் கொலை செய்து தமிழ் மக்களின் ஜன நாயகக் குரலை மௌனித்துப் போகச் செய்ய வேண்டும் என்பதே பிரபாகரனின் திட்டமாகவிருக்கின்றது. இன்றைய சம்பவத்துடன் சுமார் 12 தடவைகள் நேரடியாகக் கொலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை ஒவ்வொன்றும் படுதோல்வியே கண்டுள்ளன.

இவ்வாறான தாக்குதல்கள் தமிழ் மக்களின் கௌரவமான வாழ்வுக்காக நாம் புரியும் மக்கள் சேவைக்கு எந்த வகையிலும் தடை யாக அமையாது. மாறாக எமது கட்சியின் வேலைத் திட்டங்கள் சரியான திசையில், சாத் தியமான அணுகுமுறையில் முன்னெடுக்கப்படுகின்றது என்ற நம்பிக்கையையே மேலோங்கச் செய்கின்றது.

மக்கள் அச்சமின்றி தமது உரிமைகளுடன் வாழ வேண்டும்என்பதற்காகவே ஈ.பி.டி. பியினராகிய நாம் புலிகளின் படுகொலைகளையும் தாண்டி சேவையாற்றி வருகின்றோம். எமது பணி தொடர மக்களாகிய நீங்கள் எமக்குப் பக்கபலமாக இருக்கும்வரை. உங்களுக்காக நாம் உழைப்போம் என்றுள்ளது. (ச)


# மரண அறிவித்தல்

## பாலசிங்கம் அன்னலெட்சுமி

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் அன்னலெட்சுமி 28.11.2007 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா ராசம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் மருமகளும் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும்; பாலினி, சதீஸ்குமார், சுலோஜனா, அனுதினி, சிவகுமார், சாயினி, ஐந்துஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும்;சுதாகர், பரமானந்தராசா, தயாழினி, சுஜீவன், கவிதா, ரமணன் ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 29.11.2007 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்;
**கணவன்:** பாலசிங்கம்.
**பிள்ளைகள்**
**தம்பி:** கனகசபை (கிளி)
**மருமகன்:** ம.சுஜீவன்

**ஏழாலை மேற்கு,**
**சுன்னாகம்.**
**தொ.பே:-0214591043** (சி-665)


# நுகேகொடவில் குண்டு வெடிப்பு...

கொழும்பு புறநகரான நுகேகொடவில் உள்ள பிரபல ஆடையகமான நோலிமிட்டின் பொதிகள் காப்பகத்தில் நேற்று மாலை 5.45 மணிக்கு ஆண் ஒருவர் ஒரு பொதியைக் கொடுத்துவிட்டு கடையின் உள்ளே சென்றுள்ளார். மீண்டும் சில நிமிடங்கள் கழித்து கடைக்கு வெளியே வந்த அந்நபர் பொதிகள் காப்பகத்தில் கொடுத்த தனது பொதியை வாங்காது சென்றுள்ளார்.

அங்கு நின்ற பொதிகள் காப்பகத்தைச் சேர்ந்தவர்கள் அப்பொதியை வாங்கிச் செல்லுமாறு கோரிய போதும் அவர் அதனை வாங்காது சென்றுவிட்டார்.

இது குறித்து அப்பகுதியில் இருந்த பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் ஒருவர் அப்பொதியை பிரிக்க முயற்சித்தார். அப்போது அப்பொதியில் இருந்த குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 40 பேர் படுகாயமடைந்த நிலையில் களுபோவில மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அப் பகுதியில் பாரிய புகை மற்றும் தீயுடன் குண்டு வெடித்ததாகவும் கட்டடம் நாசமடைந்ததாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டுவெடிப்பில் அங்கிருந்த பல கடைகள் தீப்பற்றி எரிந்தன. சில கட்டடங்கள் கடுமையான சேதமடைந்துள்ளன. கடைகளுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள், வீதியால் சென்ற வாகனங்கள் சிலவும் இத்தாக்குதலையடுத்து தீப்பற்றிக் கொண்டன.

கோட்டை மற்றும் மாநகர சபைக்குரிய தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். எனினும் சுமார் அரை மணி நேரத்திற்குப் பின்னரே அவர்களால் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

இத்தாக்குதலில் காயமடைந்தவர்களில் பலர் அப்பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தில் காத்து நின்ற பொது மக்கள் என்று நுகேகொட பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் களுபோவில மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு மேலதிக மருத்துவர்களும் அனுப்பப்பட்டிருப்பதாக கொழும்புத் தேசிய மருத்துவமனை மருத்துவர் ஒருவர் தெரிவித்தார். களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இதுவரை ஐந்து பேரை கொழும்பு தேசிய மருத்துவனைக்கு மாற்றியிருப்பதாக அம்மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களில் ஐந்துபேரின் நிலைமை மிக மோசமாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனிடையே களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் அரைவாசிப்பேருக்கு மேலானோர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து நுகேகொடவுக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. நுகேகொட ஊடாக பயணிக்கும் மக்களை வேறு பகுதிகளினூடாக பயணிக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

சம்பவ இடத்தில் அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். வீதிகளில் கடும் சோதனைகள் நடைபெற்று வருகின்றன. தாக்குதல் நடைபெற்ற பகுதியில் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

ஜனாதிபதி நாட்டில் இல்லாததால் இச்சம்பவத்தை அடுத்து எடுக்கவுள்ள பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் அமைச்சர்கள் மட்ட மாநாடு ஒன்று நேற்றிரவு நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. நுகேகொட கொழும்பு நகரில் இருந்து தென் கிழக்கே 8 கீ.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள மிரிகன பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியாகும். (ச-5)


உ




சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

சைவ பரிபாலனசபை - யாழ்ப்பாணம்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 128 ஆவது குருபூசை விழாவும்**
**அகில இலங்கைச் சைவநெறித்தேர்வு 2006 பரிசளிப்பு விழாவும்**

காலம் : *02.12.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி*

இடம் : *நாவலர் ஆச்சிரம மண்டபம்*
66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தலைவர்
சிவநெறிப்புரவலர் திரு. த. சண்முகலிங்கம்
- தலைவர், சைவ பரிபாலனசபை. -

பிரதம விருந்தினர்
பேராசிரியர் இ. குமாரவடிவேல்
- பதில் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம். -

சிறப்புச் சொற்பொழிவு
திரு. அ. சிவநாதன் - அதிபர்
- யா / வல்வை சிவகுரு வித்தியாசாலை -
விடயம் - "நாவலர் இன்றிருந்தால்"

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சைவஅபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. தவகோபால்
கௌரவ செயலாளர்

இரா. செல்வவடிவேல்
கௌரவ தேர்வுச் செயலாளர்

21.11.2007


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.